SAMARASAM
# சமரசம்
மாதம் இருமுறை இதழ்
16-31 அக்டோபர் 2026 ₹25
Volume : 47 Issue : 09
www.samarasam.net

## டாலரை விட்டு விலகும் உலக நாடுகள்

## ஞானேஷ் குமாரை பதவி நீக்கக் கோருவது ஏன்?



# அல்காரித உலகில் உண்மைகளைத் தேடி..!

அக்டோபர் மாதத்தின் இறுதி வாரம் (24-31) உலக ஊடக, தகவல் எழுத்தறிவு வாரமாகக்(Global Media and Information Literacy Week) கடைப்பிடிக்கப்படுகிறது. இணையப் பயன்பாடு அதிகரித்துள்ள நிலையில் போலிச் செய்திகள், வதந்திகள் ஜனநாயகத் தூண்களில் ஒன்றான ஊடகத்தை ஆட்டம் காண வைத்துள்ளது. இந்த டிஜிட்டல் பெருவெளியில் நாம் வெறும் பார்வையாளர்களாகவோ அல்லது அல்காரிதங்களின் கட்டளைக்கு ஆடும் பொம்மைகளாகவோ தொடரப் போகிறோமா? இல்லை, தார்மிகப் பொறுப்புள்ள குடிமக்களாக நிமிர்ந்து நிற்கப் போகிறோமா?

## RSSஇன் சித்தாந்தத்தைப் புரிந்து கொள்ளாமல் அதனை எதிர்கொள்ள இயலாது!

– ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்தியத் தலைவர் **சையத் சஆதத்துல்லாஹ் ஹுஸைனி** நேர்காணல்



# SUNRAIN RESTAURANT

*A Taste of Tradition*

— SIGNATURE BIRYANI & MULTICUISINE —

شركة شمس ومطر للمطاعم











## — BUFFET CATERING —

### OUR SERVICE:

- Corporate Events
- Weddings & Receptions
- Housewarming & Baptisms
- Birthday Parties
- Festival Celebrations
- Engagements & Family Gatherings
- Anniversaries

**Party Order Booking: +966 53 423 3839 | +966 13 899 9234**

Location: Rakah - Al Janubiyah, Al Khobar, Kingdom of Saudi Arabia

+966 50 959 6012 · www.sunrainrestaurant.com · Rakah - Al Janubiyah, Al Khobar, KSA

# உள்ளே...





## அல்காரித உலகில் உண்மைகளைத் தேடி..! **10**

அக்டோபர் மாதத்தின் இறுதி வாரம்(24-31) உலக ஊடக, தகவல் எழுத்தறிவு வாரமாகக்(Global Media and Information Literacy Week) கடைப்பிடிக்கப்படுகிறது. இணைய பயன்பாடு அதிகரித்துள்ள நிலையில் போலிச் செய்திகள், வதந்திகள் ஜனநாயகத் தூண்களில் ஒன்றான ஊடகத்தை ஆட்டம் காண வைத்துள்ளது.

– மௌலவி ஹாஃபிழ் தா.முஹம்மது ஜுபைர் சித்தீகி

● கடிதங்கள் ● திருக்குர்ஆன் விரிவுரை ● நபிமொழி விளக்கம் ● புதிர் போட்டி

பதவி விலகல் மட்டுமே தீர்வாகுமா? | **தலையங்கம்** | 8

ஏமன் : முடிவில்லாத போரின் பின்னணியும் தீர்வும் | **Dr.J. முஹையுதீன் MBBS. MS. MCh.,** | 14

ஞானேஷ்குமாரை பதவி நீக்கக் கோருவது ஏன்? | **புதுமடம் ஜாபர் அலீ** | 18

நிம்மதியா? அமைதியா? எது அதிகம் தேவை? | **அ. நஜ்முத்தீன்** | 20

டாலரை விட்டு விலகும் உலக நாடுகள் | **பெரணமல்லூர் சேகரன்** | 23

தவறாகச் சித்திரிக்கப்பட்ட மொகலாய மன்னர் ஔரங்கஜேப் | **சேயன் இப்ராகிம்** | 29

சோம்பல் வேண்டாம்: இயக்கம் வேண்டும்! | **அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது** | 34

RSSஇன் சித்தாந்தத்தைப் புரிந்துகொள்ளாமல் அதனை எதிர்கொள்ள இயலாது!
**சையத் சஆதத்துல்லாஹ் ஹுஸைனி** | 36

கவிதை : கொல்லும் நஞ்சு தீண்ட அஞ்சு | **ஒசூர் மணிமேகலை** | 41

நூல் ஆய்வு : சமூக நீதி: இஸ்லாமியப் பார்வை | **K. ஜலாலுத்தீன்** | 42

இந்துக் குழந்தையின் உயிர்காக்க உதவிய ஜும்ஆ பள்ளிவாசல் | **குளச்சல் அசீம்** | 50



ஆசிரியர் – வெளியிடுபவர் : **H.அப்துர் ரகீப்**

பொறுப்பாசிரியர் : **வி.எஸ். முஹம்மத் அமீன்**

இதழ் வடிவமைப்பு : **M. முஹம்மது அபூபக்கர்**

*படைப்புகளை அனுப்ப :*
**samarasam.article@gmail.com**

*சந்தா - விநியோகப் பிரிவு விளம்பரத் தொடர்புக்கு :*
**M. அப்துல் காதர் 95661 53142**

*விளம்பரங்களை அனுப்ப :*
**samarasam.advt@gmail.com**

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு | : | ரூ.550 |
| அரையாண்டு | : | ரூ.280 |
| வெளிநாடு (ஓர் ஆண்டு) | : | ரூ.3500 |

Creative Communication Chennai
SCAN & PAY
UPI ID: creative3142@sbi

சமரசம் சந்தாக்கள், விளம்பரக் கட்டணங்களை அனுப்ப QR Codeஐ Scan செய்யவும்

பொறுப்பாசிரியர், சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
● 044-2662 0091
● samarasam.article@gmail.com
● www.samarasam.net

## சமநிலையோடு சமர்ப்பிக்கும் சமரசம்

சட்டமன்றமா? சண்டை மன்றமா? கட்டுரை சரியான சவுக்கடி. யோரான் வான் கிளாவரென் நேர்காணல் இஸ்லாத்தை எதிர்ப்பவர்களுக்கும், வெறுப்பவர்களுக்கும் சிறந்ததீர்வு. முன்மாதிரித்தலைவர் முஹம்மது (ஸல்) என்ற கட்டுரை அற்புதம். மக்களுடைய தவறுகளைத் திருத்துவதில் நபி(ஸல்) அவர்கள் கையாண்ட விதத்தைச் சிறப்பாக எடுத்துரைத்துள்ள கட்டுரை ஆசிரியருக்கு வாழ்த்துகள். ‘எழுந்திரு’ கட்டுரை சாதிக்க நினைக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் முயற்சி என்பது ஒரு உரைகல் என்பதை இரத்தினச் சுருக்கமாக எடுத்துரைத்துள்ளது. மொத்தத்தில் சமரசம் சமகால விஷயங்களைச் சமநிலையோடு சமூகத்தில் சமர்ப்பிக்கும் சன்மார்க்கம் என்று கூறலாம்.

– மௌலவி முஹ்யித்தீன் யூஸூபி, குடவாசல்

## விடை தேடும் உள்ளங்களுக்கு..!

சஹாரன்பூர் பள்ளிவாசல் இடிப்பின் மூலம் முஸ்லிம்களை மேலும் அச்சத்திற்கும் துன்பத்திற்கும் உள்ளாக்கியுள்ளது உபி அரசு. உண்மையில் மக்களாட்சிக்கு களங்கம் ஏற்படுத்தியுள்ளார்கள். முஸ்லிம்கள் நம்பிக்கை இழக்க மாட்டார்கள். நெதர்லாந்து நாட்டின் கிறித்தவ மதத்தைச் சேர்ந்த யோரானின் இறைவனைத் தேடிய பயணம் மிகவும் நெகிழ வைத்தது. விடை தெரியாத பல வினாக்களுக்கு அவருக்கு விடை கிடைத்ததைப் போல உண்மையான தேடலில் உள்ளவர்களுக்கு விடியல் கிடைக்கும் என்பதை உணர்த்தியது. பாடப்புத்தகத்தில் போதை விழிப்பு உணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற மஹபூப் ஜானின் ஆலோசனை சிறப்பு.




– M. லைலாம்மா, S. அஜித்தா,
S. மகுதனன், தேனி

## உற்சாகம் தரும் சமரசம்

சிறிய உதவிகளின் பெரிய பலன்கள் மிக அருமையான செய்தி. ஓர் அடியான் தனது சகோதரனுக்கு உதவியாக இருக்கும் காலமெல்லாம் அல்லாஹ் அடியானுக்கு உதவியாக இருப்பான் என்பதை அழுத்தமாக மனதில் பதிய வைத்தது. முன்மாதிரித் தலைவர் முஹம்மத்(ஸல்) ஷமீம் ரியாஸின் கட்டுரையில் நபி(ஸல்) அவர்கள் தன்னை வரம்பு மீறிப் புகழாதீர்கள் என்று கூறிய நிகழ்வு சிந்தனைக்குரியது. சமரசம் படித்தால் உற்சாகம் பிறக்கும். இஞ்சி குறித்த கட்டுரை பல புதிய செய்திகளைத் தந்தது.

– அப்துல் ரஷீத், திருப்பத்தூர்

## அச்சம் தந்த கட்டுரை

போதை சிறப்பிதழின் வாசகர் கடிதத்தில் ஆசிரியர் மஹபூப் ஜான் கூறிய கருத்துகள் வரவேற்கத்தக்கது. பள்ளி மாணவர்களை உறுதிமொழி எடுக்க வைத்ததும் பாராட்டுக்குரிய செயலாகும். சட்டமன்றம் சண்டை மன்றமாக மாற்றம் கண்டுள்ளது. எதற்காக மக்கள் தேர்ந்தெடுத்தார்கள் என்ற எண்ணம் இல்லாமல் பங்காளி பகையாளி சண்டையாகவே ஒவ்வொரு நாளும் கூட்டத் தொடர் நடைபெற்றது.

பசிபிக் பெருங்கடலின் எச்சரிக்கை தொகுப்பு பல தெரியாத விஷயங்களை எடுத்துரைத்ததோடு எச்சரிக்கையாகவும் ஒரு வித அச்சத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருந்தது. காலநிலை மாற்றம் நம்மைக் காப்பாற்றும் என்றே நம்புவோம். சஹாரான்பூர் பள்ளிவாசல்

## எழ வைத்த கட்டுரை

சட்டசபையின் மாண்பு குலைவது குறித்த சமரசம் தலையங்கம் பாராட்டுக்குரியது. முடியும் என்ற முடிவோடு முயற்சி செய்தால் மலையும் மடுவாகும் என்பதை எழுந்திரு கட்டுரை உணர்த்தியது. தெரிந்து செய்யும் உதவியை விட தெரியாமல் செய்யும் உதவி உயர்வானது என்ற செய்தியைத் தாங்கிய வாழ்க்கைப் பாடம் அருமை.

– எம்.எஸ். பாரூக், திருப்பாலத்துறை

இடிப்பு அராஜகப் போக்கைக் கடைப் பிடிக்கும் அரசாங்கம் சட்ட விரோதத்தையே முன்னெடுக்கும் என்பதை உணர்த்தியது. ஆளுமை மேம்பாட்டிற்கான 10 அம்சத் திட்டங்கள் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய சிறப்பு அம்சங்கள். எழுந்திரு சிறப்பான தொகுப்பு.

- சாந்த் உஸ்மானி, ஆலந்தூர்

## இயற்கையைக் காப்போம்

புதிய சட்டங்களை வகுத்துச் செயல்படும் சட்டமன்ற நடவடிக்கைகள் குறித்த தலையங்கம் புதிய அரசுக்கு வழிகாட்டுதலை வழங்கியுள்ளது. பசிபிக் பெருங்கடல் குறித்த கட்டுரை மிக முக்கியமானது. இயற்கையைக் காக்காமல் மனிதம் காக்க முடியாது. நாம் செய்யும் உதவி சிறியதாயினும் அதன் பிரதி பலன் பெரியது என்பதை வாழ்க்கைப் பாடம் சிறப்பாக உணர்த்தியது. தனிமனித வழிபாடு குறித்த நிருபமா ராவின் கட்டுரை சிறப்பு. ஆளுமை மேம்பட 10 அம்சத் திட்டங்கள் அருமை. முன்மாதிரித் தலைவர், எழுந்திரு இரு கட்டுரைகளும் சிந்தனையைத் தூண்டியது.

- ப.குருசாமி, தேனி

## விஜய் கேட்பாரா?

நீங்கள் நடந்து வந்தால் அவன் ஓடி வருவான் என்கிற நபிமொழி விளக்கம் மிகவும் தெள்ளத் தெளிவாக தெளிந்த நீரோடையாக இருந்தது. இறைவனின் சிறப்புத் தன்மையை எடுத்துக் காட்டியது.

ஜோசப் விஜய்க்கு தக்க தருணத்தில் விளக்கம் சொல்லும் விதமாக தலையங்கம் இருந்தது. தங்களின் கருத்துகளை, அறிவுரைகளை ஜோசப் விஜய் கேட்பாரா?

- T.M. பெரோஸ்கான், விருத்தாச்சலம்

## பழைய குப்பையைக் கிளறலாமா?

2026 செப்டம்பர் 16-30 சமரசம் இதழின் தலையங்கம் சட்டமன்றமா? சண்டைமன்றமா? நடைபெற்ற அனைத்தும் பார்வையாளர்களோடு அனைவர் கவனத்தையும் ஈர்த்துள்ளது. அரசுக்கு அறிவுரை வேண்டுதலாக!

ஒருவருக்கொருவர் குற்றச்சாட்டுகளாகவே விரும்பத்தகாத அளவில் இருந்தன. பழைய குப்பையைக் கிளறி, நாறடித்து, நயத்தக்க நாகரிகமில்லா பண்பாட்டை பறைசாற்றுவது விரும்பத்தக்கதல்ல!

- கவிஞர் காசீம், கடையநல்லூர்

## குறுநாவல் வாசித்ததைப் போன்ற உணர்வு

நேரு எழுதிய தீர்க்கதரிசனமான இக்காலத்திற்கும் பொருந்துகின்ற ஒரு கட்டுரையை முன்னாள் வெளியுறவுச் செயலாளர் நிருபமாராவ் எழுதியதை வாசகர்களுக்கு வழங்கியதற்கு சமரசத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அக்கட்டுரையில் பொதிந்துள்ள கருத்துகள் இன்றைய பாஜக அரசுக்கு முற்றிலும் பொருந்துவது வியப்பான விஷயமே. அதன் விளைவுகளை நாடும் நாமும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். உண்மைத் தலைவர்களான நேருவும் அம்பேத்கரும் தமது புகழ், செல்வாக்கின் மீதே அச்சப்பட்டது நெகிழ்ச்சி அளிக்கின்றது.

தனிமனித, நாயக வழிபாடு நாட்டின் சீரழிவுக்கும் எதேச்சதிகாரத்திற்கும் வழி வகுத்து விடாமல் ஒற்றை நாயக பிம்பத்தை வடபுலத்து மக்களின் சிந்தனையிலிருந்து நீக்கி உண்மையான ஜனநாயகத்தின் பக்கம் மாற்ற வேண்டிய பொறுப்பு மதச்சார்பற்ற ஜனநாயகச் சக்திகளுக்கும் நடுநிலையாளர்களுக்கும் உள்ளது.

தலையங்கம் சுட்டியபடி சட்டமன்ற நடவடிக்கைகள் விவாதங்கள் தவறான முன்னுதாரணங்களாகி விடக்கூடாது என்கிற அறிவுரை இன்றைய சட்டமன்ற உறுப்பினர்களின் கண்களைத் திறக்கட்டும்.

நாடாளுமன்றவாதி யோரான் போலவே இஸ்லாத்தைக் குறைகாண விரும்பி இறுதியில் இஸ்லாத்தின் ஈர்ப்பால் அல்லாஹ்வை

ஏற்றுக்கொண்ட மேலை நாட்டினர் பலர் இருக்கிறார்கள். இவர் இஸ்லாத்தையும் திருக்குர்ஆனையும் ஆராய்ந்த விதமும், எடுத்துக் கொண்ட முயற்சிகளும் இறுதியில் இஸ்லாத்தைத் தழுவியதும் விரிவாக ஒரு தேர்ந்த குறுநாவலை வாசித்த நிறைவைத் தந்தது.

– S.A. சபீர் அஹ்மது,
ஆணைக்காரன்சத்திரம்

## சுபச் செய்தி

நபிகள் நாயகம்(ஸல்) ஒரு முன்மாதிரித் தலைவர் என்று ஆண்டு முழுவதும் பல கோணங்களில் எழுதிக் கொண்டே இருக்கலாம். பேசிக் கொண்டே இருக்கலாம். முடிந்தவரை வாழ்க்கையில் கொண்டுவர முயல வேண்டும்.

நீண்ட காலமாக வட புலத்து பாஜக ஆளும் மாநிலங்களில் மக்களிடையே சிந்தனை மாற்றம் ஏற்பட வேண்டும் என்கிற கவலை நடுநிலையாளர்கள், மதச்சார்பற்ற தலைவர்களிடையே இருந்து வருகிறது. அது மாறும் சூழல் உருவாகிவிட்டது என்கிற சுபச் செய்தியை மாற்றத்தின் பூங்காற்று கட்டுரை தெளிவுபடுத்தியுள்ளது.

கடந்த ஆண்டை விட இந்தியா எல்நினோவின் தாக்கத்தைச் சமாளிக்கும் திறனைப் பெற்றுள்ளது என்கிற தகவல் ஆறுதல் தருகிறது.

ஆளுமை மேம்பாட்டிற்கான பத்து அம்சத் திட்டங்களின் விளக்கத்தை மீளவும் படித்து, நெஞ்சில் இருத்தி, நமது வாழ்வைச் செம்மைப்படுத்த இறைவன் அருளையும் வேண்ட வேண்டும்.

மதுவின் கொடூரங்கள் பற்றிய விழிப்பு உணர்வு ஏற்பட பாடப்புத்தகங்களில் சேர்க்கப்பட வேண்டும். அதில் அரசு கவனம் செலுத்த வேண்டியது அவசர அவசியமாகும்.

– ப.சையத் அஹ்மத்,
துளசேந்திரபுரம்

## நேர்வழி மகத்தான அருட்கொடை

யோரான் வான் கிளாவரென் நேர்காணலில் அவரின் பயணத்தைப் பற்றிய செய்திகள் படிக்கப் படிக்க ஆர்வத்தைத் தூண்டியது. அவருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களையும், அல்லாஹ்வின் கருணையையும் எண்ணும்போது மனம் பூரித்தது; கண்களில் கண்ணீர் பெருகியது. அல்லாஹ் எவ்வளவு இரக்கமுள்ளவன்! அவன் நாடிவிட்டால் யாராக இருந்தாலும் அவர்களுக்கு நேர்வழியை வழங்கி விடுவான். அல்லாஹ் நாடியவரை நேர்வழியில் செலுத்துகிறான். நேர்வழி எவ்வளவு மகத்தான அருட்கொடை! தலையங்கம் தலைப்புக்கேற்றார் போல் சாட்டையடி!

– மௌலவி அப்துல் ஹசீப் பாகவி,
திருச்சி


# மணமகன் தேவை

**வயது** : 25
**உயரம்** : 5.4
**படிப்பு** : Ph.D. Economics – 2nd Year
Assistant Professor,
Vellore Institute of Technology (VIT), Vellore

மார்க்கப் பற்றுள்ள, தொழுகையாளியான, நல்ல குணமும் அழகும் கொண்ட, வேலூரில் வசிக்கும் எளிமையான குடும்பத்தைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம் மணமகளுக்கு, நன்கு படித்த, மார்க்கப் பற்றுள்ள பேராசிரியர், ஆசிரியர் அல்லது நல்ல பணியில் உள்ள மணமகன் தேவை.

WhatsApp: +91 95780 33354
email: mdgani1974@gmail.com

அல்லாஹ்வின்
விருந்தாளிகளின்
சேவையில்
31வது
வருடம்

IATA

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# அல் அமானத் ஹஜ் சர்வீஸ்

(இந்தியா, சவூதி அரசுகளின் அங்கீகாரம் பெற்றது)

## இன்ஷா அல்லாஹ்

## 2027 ஹஜ் புக்கிங் நடைபெறுகிறது.

இவ்வாண்டு செப்டம்பர் 2026லிருந்து 2027 ரமலான் வரை ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்.

## உம்ரா குரூப்:

ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா குழு புறப்படுகிறது.
உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்

முழு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

அமானத்
TRUST WORTHY

**அல் அமானத் ஹஜ் சர்வீஸ் (இந்தியா) பி.லிட்.,**
B3, Bushra House, 1st Floor, Old No. 46, New No. 6, Nowroji Road,
Chetpet, Chennai - 600 031. Ph : 044-4860 5012 / 3, 28594441 / 2 / 3
Email : info@alamanathhajservice.com
www.alamanathhajservcie.com

**தொடர்பு கொள்வீர்**
**சென்னை 044-28594441 / 2 / 3**
**95516 622 31**
**91 98410 786 36**

சரம் : 47
மலர் : 09

وَقُولُوا قَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

1448 ஜமாதில் அவ்வல் 4 - 19 ● 2026 அக்டோபர் 16-31

# பதவி விலகல் மட்டுமே தீர்வாகுமா?

தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம் உள்ளிட்ட 20 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்புத் திருத்தப் பணி(SIR) நிறைவுற்ற நிலையில் 13.39 கோடி வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்திய தேர்தல் ஆணையத்தின்(ECI) தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எதிராக மற்ற இரு தேர்தல் ஆணையர்களான சுக்பீர் சிங் சந்து, விவேக் ஜோஷி ஆகியோர் கடந்த 10 மாதங்களில் 14 முறை எழுத்துப்பூர்வமாக ஆட்சேபனைகளைத் தெரிவித்துள்ளதாக தி இந்தியன் எக்ஸ்பிரஸ் (The Indian Express) நாளிதழின் புலனாய்வு அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

புதிய வாக்காளர்களைச் சேர்ப்பது, நீக்கப்பட்ட பெயர்களை மீண்டும் மீட்டெடுப்பது போன்ற முக்கிய முடிவுகளில் தங்களது ஒப்புதல் பெறப்பட வில்லை. புதிய வாக்காளர் சேர்க்கைக்காகப் பயன்படுத்தப்படும் படிவம் 6 (Form 6) நடைமுறைகளில் எவ்வித சட்டப்பூர்வ அதிகாரமுமின்றி தன்னிச்சையாக மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. SIR நடைமுறையின் பல முக்கிய முடிவுகள் தங்களுக்குத் தெரியாமல், கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக எடுக்கப்பட்டன. தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகளில் வெளிப்படைத் தன்மை இல்லை என்பன போன்ற ஆட்சேபனைகளை தேர்தல் ஆணையர்கள் முன்வைத்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து வாக்குத் திருட்டில் ஈடுபட்ட தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலகக் கோரியும், SIR மூலம் நீக்கப்பட்ட 13.39 கோடி வாக்காளர்களைப் பட்டியலில் மீண்டும் சேர்க்கக் கோரியும் இண்டியா கூட்டணித் தலைவர்கள் அக்டோபர் 6ஆம் தேதி முதல் தில்லியில் போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர். காக்ரோச் ஜனதா கட்சி சார்பில் பெங்களூருவில் நடைபெற்ற போராட்டத்தில் யூடியூபர் துருவ் ரத்தீ, நடிகர் பிரகாஷ்ராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இப்போராட்டத்திற்கு நாடு முழுவதும் பெரும் ஆதரவு ஏற்பட்டுள்ள நிலையில் இதனை முடக்க ஒன்றிய அரசு பல வகைகளிலும் முயற்சி செய்து வருகிறது.

கடந்த 2024 மக்களவைத் தேர்தல் முதல் பல்வேறு மாநிலத் தேர்தல்களில் பாஜகவுடன் தேர்தல் ஆணையம் கூட்டு வைத்து மிகப் பெரிய அளவில் வாக்காளர் மோசடி நடந்துள்ளதாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஏற்கனவே குற்றம் சாட்டினார். அது குறித்த தரவுகளை வெளியிட்ட அவர் போலி வாக்காளர்கள், போலி முகவரிகள், ஒரே முகவரியில் அதிக வாக்காளர்கள், தவறான புகைப்படங்கள், படிவம் 6 தவறாகப் பயன்படுத்தப் படுவது போன்ற ஐந்து வகைகளில் வாக்குகள் திருடப்படுவதாகக் கூறி அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தார்.

‘நாட்டில் நடைபெற்ற தேர்தல்கள் அனைத்தும் சட்ட விரோதமானவை. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள்(EVM) தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியலில் பல்வேறு முறைகேடுகள் செய்யப்பட்டுள்ளது. பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, அனைத்து மாநில முதல்வர்களும் சட்டவிரோதமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். எனவே மக்களவை, அனைத்து மாநில சட்டப்பேரவைகளையும் உடனடியாகக் கலைத்துவிட்டு, வாக்குச்சீட்டு(Ballot Paper) முறையில் மீண்டும் புதிய தேர்தல்களை நடத்த வேண்டும்’ என்று அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கோரிக்கை விடுத்துள்ளார் .

பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோரின் பரிந்துரையின் பேரில் இந்தியக் குடியரசுத் தலைவர் தலைமைத் தேர்தல் ஆணையரை நியமிப்பார். இந்த நடைமுறையை மாற்ற தேர்தல் ஆணையர்கள் நியமனச் சட்டம் - 2023ஐ ஒன்றிய பாஜக அரசு கொண்டு வந்தது. இச்சட்டத்தின் மூலம் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி நீக்கப்பட்டு அவருக்குப் பதில் பிரதமரால் பரிந்துரைக்கப்படும் ஒன்றிய அமைச்சர் சேர்க்கப்பட்டார். இதனால் தங்கள் விருப்பத்திற்கிணங்கச் செயல்படுபவரை தேர்தல் ஆணையராகக் கொண்டு வர பாஜக திட்டமிட்டது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்டவர் தான் ஞானேஷ் குமார்.

இப்போது எழுந்துள்ள பிரச்னை அசாதாரணமானது. இந்திய ஜனநாயகத்தையும், மக்களாட்சித் தத்துவத்தையும் குழிதோண்டிப் புதைக்கும் செயல். தேர்தல் முறை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. மக்களாட்சியின் அடிப்படையையே ஆட்டம் காண வைத்திருக்கும் இந்தக் கொடுங்குற்றம் முறையான விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஞானேஷ் குமார் பதவியிலிருந்து நீக்கப்பட்டு தண்டனை பெற வேண்டும். ஆனால் இது மட்டுமே இந்தப் பிரச்னைக்கு தீர்வாகி விடாது.

SIR ரத்து செய்யப்பட்டு நீக்கப்பட்டவர்கள் மீண்டும் சேர்க்கப்பட வேண்டும். EVM முறைக்குப் பதிலாக வாக்குச் சீட்டு முறையில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். தேர்தல் ஆணையர்கள் நியமனச் சட்டம் - 2023 ரத்து செய்யப்பட வேண்டும். மீண்டும் பழைய முறையிலேயே தேர்தல் ஆணையர்கள் நியமிக்கப்பட வேண்டும். ஆனாலும் கூட பாஜக அரசில் நீதிபதிகள் மீதே பல ஆட்சேபனைகள் எழுந்து வருவதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்த விவகாரத்தில் கூட தங்களது ஒப்புதல் இல்லாமல் படிவம் 6இல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறிய உச்ச நீதிமன்றம் ஒருமித்த கருத்து இல்லாமல் தலைமைத் தேர்தல் ஆணையர் எந்த முடிவும் எடுப்பதைத் தடுக்கும் வகையில் இடைக்கால உத்தரவு பிறப்பிக்க மறுத்துவிட்டது. தேர்தல் ஆணையத்தின் முடிவுகள் சட்டத்திற்குப் புறம்பானது எனத் தெரியவந்தால் அவை ரத்து செய்யப்படும் என்று கூறியுள்ளது. தேர்தல் ஆணையத்திற்கு ஆதரவாக 42 முன்னாள் நீதிபதிகள் கடிதம் கொடுத்துள்ளதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

நேர்மையான ஆட்சியாளர்களால் மட்டுமே மக்களாட்சியைப் பாதுகாக்க முடியும். தீய நோக்கங்களுடனும், திட்டங்களுடனும் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கும் பாஜக அரசு அகற்றப்பட்டு அனைத்துத் துறைகளிலும் சீர்திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டும். தேர்தல் ஆணையர் பதவி விலகுது மட்டுமே தீர்வாக அமையாது.



# அல்காரித உலகில் உண்மைகளைத் தேடி..!

● மௌலவி ஹாஃபிழ் **தா.முஹம்மது ஜுபைர்** சித்தீகி B.Com
மாணவர், தாருல் உலூம் நத்வத்துல் உலமா, லக்னோ, உத்தரப்பிரதேசம்

*அக்டோபர் மாதத்தின் இறுதி வாரம்(24-31) உலக ஊடக, தகவல் எழுத்தறிவு வாரமாகக் (Global Media and Information Literacy Week) கடைப்பிடிக்கப்படுகிறது. இணையப் பயன்பாடு அதிகரித்துள்ள நிலையில் போலிச் செய்திகள், வதந்திகள் ஜனநாயகத் தூண்களில் ஒன்றான ஊடகத்தை ஆட்டம் காண வைத்துள்ளது. இந்த டிஜிட்டல் பெருவெளியில் நாம் வெறும் பார்வையாளர்களாகவோ அல்லது அல்காரிதங்களின் கட்டளைக்கு ஆடும் பொம்மைகளாகவோ தொடரப் போகிறோமா? இல்லை, தார்மிகப் பொறுப்புள்ள குடிமக்களாக நிமிர்ந்து நிற்கப் போகிறோமா?*

## செய்திப் பரவலும் தகவல் பெருவெள்ளமும்

மனித நாகரிகத்தின் தொடக்கத்திலிருந்தே செய்தித் திரட்டலும் தகவல் பரிமாற்றமும் வாழ்வியலின் பிரிக்க முடியாத அங்கமாக இருந்து வந்துள்ளன. அக்காலகட்டத்தில் எங்கு உணவு கிடைக்கும்?, எந்தப்பகுதியில் வேட்டையாடும் மிருகங்கள் உள்ளன?, வானிலை எப்போது மாறும்? என்பன போன்ற அடிப்படைத் தகவல்களைத் திரட்டுவதும் செய்தி களைச் சேகரிப்பதும் ஒரு மனிதனின் வாழ்வைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாக இருந்தது.

முற்காலத்தில் முரசு கொட்டியும், புறாக்கள் மூலமும், ஓலைச்சுவடிகள் வழியாகவும் நிகழ்ந்த தகவல் பரவல் வார இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி எனப் பரிணாமம் அடைந்தது. இன்று எல்லாத் தரப்பு மக்களும் எளிதில் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் வகையில் விரல் நுனியில் செய்திகள் ஜனரஞ்சகம் அடைந்துள்ளன. அக்காலத்தில் தகவல்களைத் தேடி அலைந்து கொண்டிருந்த மனித சமூகம் இன்று தகவல் பெருவெள்ளத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. நொடிக்கு நொடி பரவும் செய்திகளில் எது உண்மை, எது புனைவு என்பதைப் பிரித்தறிய முடியாத சூழல் நிலவுகிறது.

சரியான செய்திகளைத் தருவது என்ற மனநிலை மாறி, யார் செய்தியை முதலில் கூறுவது என்ற போட்டி நிலவுவதால் இங்கே உண்மை பொய் என்பதற்கு வித்தியாசம் தெரியாத நிலை உருவாகியிருக்கிறது. வெளியரங்கத்தில் தொழில்நுட்பம் மனித சமூகத்தை ஒன்றிணைத்தது போல் காட்சி தந்தாலும், உண்மையில் தவறான வதந்திகளும் போலிச் செய்திகளும் மனிதர்களைப் பல்வேறு விதத்தில் கூறுபோட்டிருக்கின்றன.

பதற்றத்தை விற்றுப் பிழைக்கும் பரபரப்பு அரசியல், வதந்திகளை மூலதனமாக்கும் வணிக வலைகள், தனிநபரின் மாண்பைச் சிதைக்கும் சைபர் அவதூறுகள் எனப் பொது வெளி நச்சுமயமாகி விட்டது. அறிவூட்டுவதற்குப் பதிலாக தகவல் மனிதர்களின் சிந்தனையை மழுங்கடிக்கும் ஆயுதமாக மாற்றப்பட்டிருக்கிறது என்பதே கசப்பான உண்மை.

## உலகளாவிய விழிப்பு உணர்வும் ஊடக எழுத்தறிவும்

இந்த நச்சுச் சூழலின் அபாயத்தை உணர்ந்த ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ(UNESCO) அமைப்பு ஆண்டுதோறும் அக்டோபர் மாதத்தின் இறுதி வாரத்தை உலக ஊடக தகவல் எழுத்தறிவு வாரம்(Global Media and Information Literacy Week) எனப் பிரகடனம் செய்து விழிப்பு உணர்வை முன்னெடுக்கிறது.

கண்ணில் படுவதையெல்லாம் உண்மையென நம்பிவிடக் கூடாது என்ற விமர்சனக் கண்ணோட்டம், ஒரு செய்தியின் வேர் எது என்பதை ஆராயும் தாகம், இணையவெளியில் ஒருவன் உதிர்க்கும் ஒவ்வொரு சொல்லுக்கும் பொறுப்பு உண்டு என்ற உணர்வு, தார்மிக நெறி இவற்றை உலக மானுடத்திற்குப் பயிற்றுவிப்பதே இதன் நோக்கம்.

## உண்மை சரிபார்ப்பின் (Fact Checking) முன்னோடிகள் முஸ்லிம்களே!

சர்வதேசச் சமூகம் இன்று பேசும் ஊடக விழுமியங்களைப் பதினான்கரை நூற்றாண்டுகளுக்கு முன்பே இறைவன் தன் இறுதித் தூதர்(ஸல்) அவர்கள் வாயிலாக வகுத்துத் தந்திருப்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

‘இறைநம்பிக்கை கொண்டவர்களே! தீயவன் ஒருவன் ஏதேனும் ஒரு செய்தியை உங்களிடம் கொண்டு வந்தால், அதன் உண்மை நிலையை நன்கு விசாரித்துத் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் தெரியாத்தனமாக ஏதேனும் ஒரு கூட்டத்தினர்க்கு தீங்கிழைத்து விட்டுப் பின்னர் உங்கள் செயலுக்காக வருந்தும் நிலை ஏற்பட்டுவிடக் கூடாது.’ (திருக்குர்ஆன் 49:6)

எவ்வளவு ஆழமான எச்சரிக்கை! ஒரு தவறான தகவல் ஒட்டுமொத்தச் சமூகத்தையே அநீதிக்கு ஆளாக்கிவிடும் என்ற உண்மையை அன்றே குர்ஆன் சுட்டிக் காட்டியது. ‘தான் கேள்விப்பட்டதையெல்லாம் மக்களிடம் பரப்பித் திரிவதே ஒருவன் பொய்யன் என்பதற்கான அடையாளம்’ என்று திருவாய் மலர்ந்தார்கள் இறுதித் தூதர்(ஸல்) அவர்கள். (அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரலி) நூல்: முஸ்லிம்)

ஒரு வகையில் உண்மை சரிபார்ப்பினை (Fact Checking) உலகிற்கு அறிமுகம் செய்தது முஸ்லிம்கள்தான். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறிய சிறிய வாசகம் தொடங்கி அக்காலத்தில் நடந்த பெரும் பெரும் நிகழ்வுகள் வரை ஒவ்வொரு செய்தியும் வெறுமனே செவிவழியாகக் கடத்தப்பட்டதல்ல. மாறாக

அதை யார் அறிவித்தார், அவரிடம் யார் கேட்டார் என்று அன்று தொட்டு இன்று வரை அதற்கான அறிவிப்பாளர் சங்கிலி பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

அறிவிப்பாளர்களின் உண்மைத்தன்மை, தனிநபர் ஒழுக்கம், அவரின் நேர்மை இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டே அச்செய்தி வலுப்பெறுவதும் வலுவிழப்பதும் தீர்மானிக்கப்படுகிறது. இதற்காகவே அறிவிப்பாளர் தொடரில் இருக்கும் அனைவரின் வரலாறும் இதே முறையில் பதிவு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டும் வருகிறது.

### சிந்தனையைச் சிறைப் பிடிக்கும் அல்காரித மாயவலை

தொழில்நுட்ப வளர்ச்சியால் உலக நிகழ்வுகளை நேரலையாக அறிவது, அறிவுத் தளங்களை உடனுக்குடன் அணுகுவது போன்ற பல நன்மைகள் விளைந்துள்ள அதே சமயத்தில் மனித மனங்களை அடிமையாக்கும் அல்காரித (Algorithm) மாயவலை பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது.




**ஒரு வகையில் உண்மை சரிபார்ப்பினை(Fact Checking) உலகிற்கு அறிமுகம் செய்தது முஸ்லிம்கள்தான். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய சிறிய வாசகம் தொடங்கி அக் காலத்தில் நடந்த பெரும் பெரும் நிகழ்வுகள் வரை ஒவ்வொரு செய்தியும் வெறுமனே செவி வழியாகக் கடத்தப்பட்டதல்ல. மாறாக அதை யார் அறிவித்தார், அவரிடம் யார் கேட்டார் என்று அன்று தொட்டு இன்று வரை அதற்கான அறிவிப்பாளர் சங்கிலி பாதுகாக்கப்பட்டிருக்கிறது.**

நீங்கள் எதைத் தேடுகிறர்களோ, எதைப் பார்த்து ஒரு நொடி தாமதிக்கிறர்களோ அதை வைத்தே உங்கள் மனோபாவத்தை இந்த அல்காரிதங்கள் அளவிடுகின்றன. பின்னர் உங்கள் வெறுப்புகளையும் விருப்புகளையும் மூலதனமாக்கி, உங்களுக்குப் பிடித்தமான, உங்கள் சார்புநிலையை நியாயப்படுத்தும் தகவல்களை மட்டுமே உங்கள் கண்களுக்கு முன்னால் கொட்டுகின்றன. இது நாம் நம்புவது மட்டுமே உலகம், நம் கருத்து மட்டுமே உண்மை என்ற தீவிரமான ஒருதலைப்பட்சப் பார்வைக்குள் மனிதனைத் தள்ளுகிறது.

அதுபோக நீண்ட நேர வீடியோக்களை (Long Form Content) நாம் சுயமாகத் தேர்வு செய்து பார்க்கும் சுதந்திரம் குறைந்து, விரல் நுனியில் தானாக ஓடும் ஷார்ட்ஸ், ரீல்ஸ் (Short Form Content) மனித சுதந்திரத்தைப் பறித்து நாம் எதைப் பார்க்க வேண்டும் என்பதை யாரோ முடிவு செய்யும் சூழலை உருவாக்கியுள்ளது. மக்களின் சுதந்திரத்தைப் பறிப்பதாலோ என்னவோ யூடியூபர் என்ற பெயர் பரிணாமம் பெற்று இன்ஃப்ளுயன்சர் ஆக மாறியுள்ளது. அவரவர் தேவைக்கேற்ப எடுக்கும் முடிவுகளைத் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி அந்த முடிவில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்குப் பெயர்தானே Influence?

மனித சமூகத்திற்கு எதிரான கருத்துகள் பரப்பப்படும் பொழுது எட்டுத்திக்கும் எதிர்ப்புகள் கிளம்பினால் இந்த இன்ஃப்ளுயன்சர்கள் களத்தில் இறங்கி அக்கருத்தை நியாயப்படுத்த முயற்சிக்கிறார்கள். ஒரு விதத்தில் இது சரிதானே என்ற மனநிலையும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுவிடுகிறது. சர்ச்சைக்குரிய கருத்தைப் பேசுவதால் அவர்களும் நாளுக்கு நாள் வளர்ச்சியை நோக்கிச் சென்று கொண்டே இருக்கிறார்கள். உண்மைகளை எடுத்துரைக்க வேண்டிய ஊடகத்துறை

நாளுக்கு நாள் வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டே இருக்கிறது.

### ஆட்டம் காணும் நான்காவது தூண்

பெரும்பெரும் தொழில் முதலைகள், காலக்கெடுவுடன் கூடிய செல்வாக்கிற்குச் சொந்தக்காரர்களான அரசியல்வாதிகளின் தலையீட்டால் ஜனநாயகத் தூண்களில் ஒன்றான ஊடகம் அடிப்புறமாக அரித்து அரித்து பெரும் பகுதி அரிக்கப்பட்டு இன்று ஆட்டம் கண்டு வருகிறது. சாதாரண இணையப் பயணிகளைப் போல் எதைச் செய்தியாக்கு வது என்றே தெரியாமல் இன்றைய செய்திப் பக்கங்களும் தொலைக்காட்சி சேனல்களும் TRP (Television Rating Point) என்ற ஒற்றை இலக்கை மட்டுமே உற்றுநோக்குவதால் உண்மை பொய் என்ற வித்தியாசம் பார்க் காமல் கிடைத்த செய்திகளை வாசிப்பதோடு இறுதியில் ‘இந்தத் தகவலை நெட்டிசன்கள் இணையத்தில் வைரலாக்கி வருகின்றனர்’ என்ற வாசகத்தை இணைத்து, ‘இது செய் தியா?’ என்ற கேள்வி எழுப்பும் நிலைக்கு மக்களைத் தள்ளிவிடுகின்றனர்.

### நாம் என்ன செய்யப் போகிறோம்?

இந்த டிஜிட்டல் பெருவெளியில் நாம் வெறும் பார்வையாளர்களாகவோ அல்லது அல்காரிதங்களின் கட்டளைக்கு ஆடும் பொம்மைகளாகவோ தொடரப் போகி றோமா? இல்லை, தார்மிகப் பொறுப்புள்ள குடிமக்களாக நிமிர்ந்து நிற்கப் போகிறோமா? என்ற கேள்வியை நம்மை நோக்கி நாமே கேட்க வேண்டிய கட்டாயத்தில் இருக் கிறோம். பரபரப்பை உண்டாக்கும் ஒரு செய்தியைக் கண்டதும் அதை உடனே பகிரா மல் செய்தியின் வேர் எது? நம்பகமான மூலத்திலிருந்துதான் இது புறப்பட்டிருக் கிறதா? என்பதைத் தீர விசாரிக்கும் குர்ஆனி யப் பண்பை மீட்டெடுக்க வேண்டும்.

AI பயன்பாடுகள் அதிகரித்துள்ள இச்சூழ லில் வதந்திகளுக்குப் பலியாகாமல் இருக்க நாமும் விழிப்பு உணர்வுடன் இருப்பதோடு, நம் குடும்பத்தாருக்கும் சுற்றத்தாருக்கும்



உண்மை பொய் என்ற வித்தியாசம் பார்க்காமல் கிடைத்த செய்திகளை வாசிப்பதோடு இறுதியில் ‘இந்தத் தகவலை நெட்டிசன்கள் இணையத்தில் வைரலாக்கி வருகின்றனர்’ என்ற வாசகத்தை இணைத்து, ‘இது செய்தியா?’ என்ற கேள்வி எழுப்பும் நிலைக்கு மக்களைத் தள்ளிவிடுகின்றனர்.

விழிப்புஉணர்வை ஏற்படுத்த வேண்டும். ஒரு செய்தி உண்மையே என்றாலும் அதைப் பகிர்வது சமூகத்திற்கு நன்மையைத் தருமா அல்லது பிளவை ஏற்படுத்துமா என்பதை ஆய்ந்து அதற்கேற்பச் செயல்பட வேண்டும்.

இம்மாய வலைக்கு சிறுவர்கள், இளைஞர் களை இறையாக்காமல் தடுக்க இது தொடர் பான தகவல்களைத் திரட்டி பாடத்திட்டத்தில் இணைக்க வேண்டும். அவ்வப்போது விழிப்பு உணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும். அளவுக்கதிகமான இணைய பயன்பாடு சிந்தனையை மழுங்கச் செய்துவிடும் என் பதை குழந்தைகள், இளைஞர்களுக்குப் புரிய வைத்து அவர்களுக்குப் புத்தக வாசிப்பை அறிமுகப்படுத்த வேண்டும்.

ஜனநாயகத் தூண்களில் ஒன்று இடிந்து விழுவதை வேடிக்கை பார்க்கப் போகி றோமா? அல்லது அறத்துடன் செயல்படப் போகி றோமா? அடுத்த பக்கத்தைப் பார்க்கும் முன் ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள்!




# முடிவில்லாத போரின் பின்னணியும் தீர்வும்

Dr.J. முஹையுதீன் MBBS MS MCh

கடந்த இதழ் தொடர்ச்சி..

### ஹூதிகளின் தாக்குதல்களும் போரின் எல்லை விரிவடைந்ததும்..!

காலப்போக்கில் ஹூதிகளும் தங்களது ஏவுகணை, ஆளில்லா விமானத் திறன்களைப் பயன்படுத்தி சவூதி அரேபியாவிற்குள் தாக்குதல்களை மேற்கொண்டனர். சவூதி எண்ணெய் நிலையங்கள், விமான நிலையங்கள், பிற இலக்குகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்ட பல சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதனால் ஏமனுக்குள் நடைபெற்ற மோதல் அதன் எல்லைகளுக்கு வெளியேயும் தாக்கத்தை ஏற்படுத்த ஆரம்பித்தது.

பின்னர் ஃபலஸ்தீனின் காஸா மீது இஸ்ரேல் நடத்தும் இன அழிப்புப் போரைத் தொடர்ந்து ஹூதிகள் செங்கடலில் கப்பல்களைத் தாக்கத் தொடங்கினர். அவை காஸாவில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைக்கு எதிரான தங்களது நடவடிக்கைகள் என்று அவர்கள் கூறினர். இதற்குப் பதிலாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டன. இதன் மூலம் ஏமனின் போர் மீண்டும் ஒரு சர்வ தேசப் பிரச்னையின் மையத்துக்கு வந்தது.

### மறக்கப்பட்ட மனிதர்கள்

2015 முதல் 2022 தொடக்கம் வரை ஏமனில் சுமார் 3,77,000 பேர் உயிரிழந்ததாக ஐ.நா மதிப்பிட்டுள்ளது. இவர்களில் சுமார் 60 விழுக்காட்டினர் நேரடிப் போரினால் அல்லாமல் உணவுப் பற்றாக்குறை, போதிய மருத்துவ வசதிகள் கிடைக்காதது போன்ற போரின் மறைமுக விளைவுகளால் உயிரிழந்தனர் என்று Council on Foreign Relation (CFR) குறிப்பிடுகிறது.

### முற்றுகையும் உணவுப் பிரச்னையும்

ஏமன் தனது உணவு, அத்தியாவசியப் பொருட்களில் பெருமளவை வெளிநாடுகளிலிருந்து பெற வேண்டிய நாடாக இருந்து வந்தது. இதனால் துறைமுகங்கள், சாலைகள், விமான நிலையங்கள், வர்த்தகப் பாதைகள் போரின் காரணமாகத் தடையுற்றபோது அதன் தாக்கம் மிகப் பெரியதாக இருந்தது.

2015 முதல் கடல் வழியாக ஹூதிகளுக்கு ஈரான் ஆயுதங்கள் வழங்குவதைத் தடுப்பதாகக் கூறி சவூதி அரேபியா கடற்படை கட்டுப்பாடுகளை விதித்தது. ஆனால் இந்தக் கட்டுப்பாடுகள் மனிதாபிமான நெருக்கடியை மேலும் மோசமாக்கியதாக நீண்ட காலமாக விமர்சனங்கள் எழுந்தன. ஏமன் பிரச்னையில் இதுவும் ஓர் அடிப்படையான முரண்பாடு. ஒரு தரப்பு ஆயுத விநியோகத்தைத் தடுக்க பாதுகாப்பு நடவடிக்கை அவசியம் என்று கூறுகிறது. மறுபுறம் மனிதாபிமான அமைப்புகள், உணவு, எரிபொருள், மருந்து போன்றவை மக்களை அடைவதில் ஏற்படும் தடைகளின் விளைவுகளைச் சுட்டிக்காட்டுகின்றன. இவற்றுக்கு நடுவில் சிக்குவது சாதாரண மக்களே.

## அமைதிக்கான ஒரு வாய்ப்பு

எட்டு ஆண்டுகள் நீண்ட கடுமையான போருக்குப் பின்னர் 2022ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சியில் போர் நிறுத்தம் ஏற்பட்டது. அந்த அதிகாரப்பூர்வ போர் நிறுத்தம் 2022 அக்டோபரில் முடிவடைந்தாலும் அதன் பின்னர் ஒரு காலத்திற்குப் பெரிய அளவிலான நேரடி மோதல்கள் குறைந்தன. ஓமன் நடுநிலை முயற்களுடன் சவூதி அரேபியா, ஹூதி பிரதிநிதிகளுக்கு இடையிலும் பேச்சுவார்த்தைகள் நடந்தன. துறைமுகங்களைத் திறப்பது, சன்ஆ விமான நிலையத்தின் செயல்பாடு, மறுகட்டமைப்பு, வெளிநாட்டுப் படைகள் வெளியேறும் காலக்கெடு போன்றவை பேச்சுவார்த்தைகளில் இடம்பெற்றதாக CFR குறிப்பிடுகிறது. பல ஆண்டுகளுக்குப் பிறகு ஏமன் அமைதியை நோக்கி நகரலாம் என்ற நம்பிக்கை அப்போது உருவானது.



ஆனால் அமைதி என்பது துப்பாக்கிகள் சில காலம் அமைதியாக இருப்பது மட்டும் அல்ல. அரசியல் உடன்பாடு வேண்டும். பல்வேறு ஏமன் தரப்புகளுக்கிடையே அதிகாரப் பகிர்வும் வேண்டும். பொருளாதாரம் மீள வேண்டும். மக்களுக்குச் சம்பளம் கிடைக்க வேண்டும். துறைமுகங்களும் விமான நிலையங்களும் இயங்க வேண்டும். இடம்பெயர்ந்த மக்கள் வீடு திரும்ப வேண்டும். மிக முக்கியமாக போர் மீண்டும் தொடங்காத வகையில் அரசியல் அமைப்பு உருவாக வேண்டும்.

## 2026: மீண்டும் தீவிரமடைந்த மோதல்

2026ஆம் ஆண்டில் ஏமனின் நிலை மீண்டும் மோசமடைந்துள்ளது. 2026 ஜூலையில் சவூதி அரேபியாவின் அப்ஹா விமான நிலையத்தின் மீது ஹூதி தாக்குதல்கள் நிகழ்ந்ததைத் தொடர்ந்து மீண்டும் பெரிய அளவிலான உள்நாட்டுப் போர் உருவாகும் அபாயம் அதிகரித்ததாகக் குறிப்பிட்டது. செப்டம்பரில் நிலை இன்னும் தீவிரமடைந்தது. செப்டம்பர் 18ஆம் தேதி நிலவரப்படி அண்மைக்காலச் சண்டைகளால் 1,12,000க்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக ஐ.நா குடியேற்ற அமைப்பை மேற்கோள் காட்டி Council on Foreign Relation (CFR) தெரிவித்தது. தாயிஃப், ஜித்தா நகரை நோக்கிய தாக்குதல் உலக அளவில் பேசுபொருளாக மாறியது. புனித மக்காவைக் கடந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது. அதனை ஏமன் தரப்பு மறுத்தது மட்டுமின்றி சவூதியின் இந்தச் செயலைக் கண்டிக்கும் விதமாக சனாவில் மாபெரும் கூட்டத்தையும் கூட்டியது.

செப்டம்பர் 19 அன்று ரியாத் நோக்கி ஏவப்பட்ட ஹூதி ஏவுகணையை சவூதி வான் பாதுகாப்பு அமைப்பு இடைமறித்ததாக சவூதி அதிகாரிகள் தெரிவித்தனர். உயிரிழப்போ சேதமோ ஏற்படவில்லை என்று அதிகாரிகள் கூறினர். ஹூதிகள் சவூதி எண்ணெய், பிற கட்டமைப்புகளைத் தாக்கியதாகவும் கூறினர். போர்க்களத்தில் இரு தரப்புகளும் வெளியிடும் சிலவற்றை உறுதிப்படுத்துவது கடினமாகவே உள்ளது. இதனால் சில ஆண்டுகளாக ஓரளவு குறைந்திருந்த சவூதி ஹூதி நேரடி மோதல் மீண்டும் தீவிரமடையும் அபாயம் உருவாகியுள்ளது.

## மதப்பிரிவினைப் போராக இதைப் பார்க்கலாமா?

ஏமன் மோதலை ஸன்னி ஷியா மோதல் என்று விவரிப்பது பொதுவாகக் காணப்படுகிறது. ஹூதி இயக்கத்தின் மதப் பின்னணி ஸைதி ஷியா மரபுடன் தொடர்புடையது. சவூதி அரேபியா பெரும்பான்மை ஸன்னி நாடு. ஈரான் ஷியா பெரும்பான்மை நாடு. இந்த அடையாளங்கள் பிராந்திய அரசியலில் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆனால் இந்த அடையாளங்களை மட்டும் வைத்து ஏமன் போரை விளக்குவது போதுமானதல்ல. ஏற்கனவே குறிப்பிட்டது போல் இந்த பிரச்னையின் முன்னோடி 1962-1970 போர் தான். அன்று சவூதி அரேபியா ஹூதி இயக்கத்தின் முன்னோடியான ஸைதி ஷியா அரசுக்கு முழு

ஆதரவும் உதவியும் செய்துள்ளதை இங்கே நினைவில் கொள்ள வேண்டும். உண்மையில் அரசியல் அதிகாரம், உள்ளூர் பழங்குடி உறவுகள், வடக்கு தெற்கு பிரிவுகள், பொருளாதார நலன்கள், வெளிநாட்டு செல்வாக்கு, துறைமுகங்கள், கடல்வழிகளின் கட்டுப்பாடு ஆகியவையே மோதலில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

2026 செப்டம்பர் 20ஆம் தேதி வெளியான Yemen Press Agency கட்டுரை இன்னும் வலுவான ஒரு நிலைப்பாட்டை முன் வைக்கிறது. சவூதி அரேபியா இந்தப் போரை மதப்பிரிவினை மோதலாக மாற்ற முயற்சிப்பதாக அந்த ஊடகம் குற்றம் சாட்டுகிறது. சிரியாவிலிருந்து தீவிரவாதப் போராளிகள் கொண்டு வரப்பட்டதாகவும் பல்வேறு குற்றச் சாட்டுகளை அது வெளியிட்டுள்ளது.

### தகவலும் போரின் ஓர் ஆயுதம்

நவீன போர்கள் நிலத்திலும் வானிலும் மட்டுமல்ல; செய்திகளிலும் சமூக ஊடகங்களிலும் நடைபெறுகின்றன. ஒரு தரப்பு தனது தாக்குதலை பாதுகாப்பு நடவடிக்கை என்று அழைக்கலாம். எதிர்தரப்பு அதையே ஆக்கிரமிப்பு என்று அழைக்கலாம். ஒருவர் கிளர்ச்சியாளர்கள் என்று அழைக்கும் குழுவை மற்றொருவர் எதிர்ப்புப் படை என்று அழைக்கலாம். ஒரு தாக்குதலில் என்ன நடந்தது என்பதைப் பற்றியே இரு தரப்புகளும் முற்றிலும் மாறுபட்ட தகவல்களை வெளியிடலாம். ஏமன் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. சவூதி தரப்பின் அறிவிப்புகள், ஹூதி நிர்வாகத்தின் அறிவிப்புகள், சர்வதேச ஊடகங்கள், மனித உரிமை அமைப்புகள், மேற்கத்திய அரசுகளின் அறிக்கைகள் என ஒவ்வொன்றிலும் சொற்களும் முன்னுரிமைகளும் மாறுபடுகின்றன. எனவே ஏமன் போரைப் புரிந்து கொள்ள விரும்பும் வாசகர் ஒரே ஊடகத்தின் செய்தியை மட்டும் சார்ந்திருக்காமல் பல்வேறு ஆதாரங்களை ஒப்பிட்டுப் பார்ப்பது அவசியம்.




### உலகம் ஏன் ஏமனைப் பற்றி கவலைப்பட வேண்டும்?

1. **மனிதாபிமானம்:** கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையைப் பாதித்த ஒரு நெருக்கடி உலகின் கவனத்திற்குரியது.

2. **ஏமனின் புவியியல் அமைப்பு :** பாப் அல் மந்தப் வழியாகச் செல்லும் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டால் அதன் விளைவுகள் ஏமனிலும் மத்திய கிழக்கிலும் மட்டும் நிற்காது. சர்வதேச வர்த்தகம், கப்பல் கட்டணங்கள், எரிசக்தி விநியோகம், பொருட்களின் விலைகள் வரை அதன் தாக்கம் செல்லலாம்.

3. **பிராந்திய பாதுகாப்பு:** ஏமனில் மோதல் தீவிரமடையும் ஒவ்வொரு முறையும் அது சவூதி அரேபியா, செங்கடல், ஏடன் வளைகுடா, அதற்கு அப்பாலும் பரவும் அபாயம் உள்ளது.

4. **தீவிரவாத அமைப்புகளுக்கான இடைவெளி:** பலவீனமான அரசு, நீண்ட காலப் போர், வறுமை, அரசியல் குழப்பம் ஆகியவை ஆயுத அமைப்புகள் வேரூன்றுவதற்கான சூழலை உருவாக்கலாம். ஏமனில் அல் காயிதாவின் அரேபியத் தீபகற்பப் பிரிவு உள்ளிட்ட அமைப்புகள் கடந்த காலத்தில் இத்தகைய சூழ்நிலையைப் பயன்படுத்தியுள்ளன. எனவே ஏமனில் அமைதி ஏற்படுவது ஏமன்

மக்களுக்கு மட்டும் தேவையான ஒன்று அல்ல. பரந்த பிராந்தியத்திற்கும் உலகிற்கும் அது முக்கியமானது.

### *அமைதிக்கான பாதை எது?*

மனிதாபிமான உதவி தடையின்றி சென்றடைய வேண்டும். உணவு, மருந்து, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம் அரசியல் ஆயுதமாக மாறக்கூடாது. செங்கடல் கப்பல் போக்குவரத்தின் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட வேண்டும். அதே நேரத்தில் கடந்த காலத்தில் பொது மக்களுக்கு எதிராக நிகழ்ந்ததாகக் கூறப்படும் கடுமையான சட்ட மீறல்கள் குறித்து நம்பகமான விசாரணைகளும் பொறுப்புக் கூறலும் அவசியம் என்று மனித உரிமை அமைப்புகள் தொடர்ந்து வலியுறுத்துகின்றன.

ஏமன் பிரச்னைக்கு நிலையான தீர்வு கிடைக்க வேண்டுமெனில் அது இறுதியில் அரசியல் தீர்வாகத்தான் இருக்க வேண்டும் என்பதில் பல சர்வதேச முயற்சிகள் ஒன்றுபடுகின்றன. அதற்காக முதலில் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் குறைய வேண்டும். ஏமனின் பல்வேறு அரசியல், சமூகக் குழுக்களும் பேச்சுவார்த்தையில் இடம்பெற வேண்டும். சவூதி அரேபியா, ஈரான் போன்ற பிராந்திய சக்திகளின் பாதுகாப்புக் கவலைகளும் பேசப்பட வேண்டும். அதே வேளை இவர்களின் தலையீடு இல்லாமல் ஒரு நாட்டின் சுய நிர்ணயம் பாதுகாக்கப்பட வேண்டும்.

இஸ்ரேலுடன் ஆபிரஹாம் ஒப்பந்தத்தை ஏற்படுத்தி விட்டு ஏமனுக்குள்ளேயும் சூடானுக்குள்ளேயும் குழப்பத்தை ஏற்படுத்தும் துபாய் முதலான அமீரக நாடுகளை மக்கள் கண்டிக்க வேண்டும். அமெரிக்காவின் இராணுவத்திடம் தங்களுடைய நாட்டின் பாதுகாப்பை ஒப்படைப்பதற்குப் பதிலாக ஒன்றிணைந்த இராணுவத்தை இந்த அரபுலகம் ஏற்படுத்த வேண்டும். அரசுகள் அநீதியான போரை நடத்தும் போது சர்வதேச ஊடகங்களும், அறிஞர்களும் ஒரு சார்பாகக் கருத்துகளைத் தெரிவித்து எரியும் நெருப்பில் எண்ணையை ஊற்றக் கூடாது.



*அமைதி என்பது துப்பாக்கிகள் சில காலம் அமைதியாக இருப்பது மட்டும் அல்ல. அரசியல் உடன்பாடு வேண்டும். பல்வேறு ஏமன் தரப்புகளுக்கு இடையே அதிகாரப் பகிர்வும் வேண்டும். பொருளாதாரம் மீள வேண்டும். மக்களுக்குச் சம்பளம் கிடைக்க வேண்டும். துறைமுகங்களும் விமான நிலையங்களும் இயங்க வேண்டும். இடம்பெயர்ந்த மக்கள் வீடு திரும்ப வேண்டும். மிக முக்கியமாக போர் மீண்டும் தொடங்காத வகையில் அரசியல் அமைப்பு உருவாக வேண்டும்.*

ஹூதிகளுக்கு ஈரான் ஆயுதங்களை வழங்கக் கூடாது என கூறும் அறிஞர்களும் ஊடகங்களும், இஸ்ரேல் அமெரிக்காவிடம் உதவியை நாடும் சவூதியையும் கண்டிக்க வேண்டும். சமாதான தூதுக் குழுவை ஏற்படுத்தி இதுபோன்ற அநீதியான போர்களைத் தடுக்க வேண்டும். 1300 ஆண்டுகளாக ஒன்றாக இருந்த இந்தப் பகுதி நூறு ஆண்டுகளாகத்தான் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதனை மீண்டும் பழைய அமைதி நிலைக்குக் கொண்டு வருவது சுலபம். பல ஆண்டுகளாக இருளுக்குள் வாழ்ந்த ஏமன் மக்களுக்கு அத்தகைய அமைதியே உண்மையான விடியலைத் தரும்.

# ஞானேஷ் குமாரை பதவி நீக்கக் கோருவது ஏன்?



**- புதுமடம் ஜாபர் அலீ**

இந்திய தேர்தல் ஆணையத்தின் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்திருப்பதன் பின்னணியில் மேற்கு வங்கத்தில் நடந்த SIR (Special Intensive Revision) நடவடிக்கை மிகப்பெரிய கேள்விக்குறியாக மாறியுள்ளது.

தேர்தல் ஆணையமே உச்சநீதிமன்றத்தில் தெரிவித்த புள்ளிவிவரம் அதிர்ச்சியளிக்கிறது. SIR நடவடிக்கையில் மேற்கு வங்கத்தில் 27.16 இலட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டன. அவர்களில் 22.21 இலட்சம் பேர் மீண்டும் பெயரைச் சேர்க்கக் கோரி மேல்முறையீடு செய்துள்ளனர். அதாவது நீக்கப்பட்டவர்களில் சுமார் 82 விழுக்காட்டினர் தங்கள் பெயரை மீண்டும் சேர்க்க வேண்டுமென முறையிட்டுள்ளனர். ஆனால் 2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன் மீண்டும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்கள் 1,607 பேர் மட்டுமே.

இங்கேதான் மிக முக்கியமான கேள்வி எழுகிறது. ஒரு வாக்காளரின் பெயர் நீக்கப்பட்டு அவர் மேல்முறையீடு செய்தாலும் அந்த மனு தேர்தல் முடியும் வரை தீர்க்கப்படவில்லை என்றால் அவரது வாக்குரிமையை பின்னர் மீட்டெடுப்பதால் என்ன பயன்?

### *27 இலட்சம் பேர் எப்படி நீக்கப்பட்டார்கள்?*

SIR நடைமுறையில் சுமார் 60.06 இலட்சம் வாக்காளர்கள் தேர்தல் ஆணையத்தின் தரவுகளில் logical discrepancies இருப்பதாகக் குறிக்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். உச்ச நீதிமன்ற உத்தரவுக்குப் பிறகு சுமார் 700 நீதித்துறை அதிகாரிகள் இந்த விவகாரங்களைப் பரிசீலித்தனர். அதன் பின்னர் 27.16 இலட்சம் பெயர்கள் நீக்கப்பட்டன.

தேர்தல் ஆணையத்தின் விளக்கம் வேறு. இறந்தவர்கள், இடம் மாறியவர்கள், காணாமல் போனவர்கள், இரட்டைப்பதிவுகள் உள்ளிட்ட காரணங்களால் பெயர்கள் நீக்கப்பட்டதாகக் கூறுகிறது. எனவே 22.21 இலட்சம் பேர் மேல்முறையீடு செய்திருப்பது மட்டும், அந்த 22 இலட்சம் பேரும் தகுதியான வாக்காளர்கள் என்பதற்கான நிரூபணம் அல்ல.

ஆனால் ஜனநாயகக் கவலை வேறு. தகுதியானவர் யார் என்பதைத் தீர்மானிக்கும் நடைமுறையே தேர்தலுக்கு முன் முடிவடையவில்லை என்றால் ஒரு குடிமகனின் வாக்குரிமையைப் பாதுகாப்பது எப்படி? இதுதான் SIR சர்ச்சையின் மையக் கேள்வி.

### *14 ஆட்சேபனைகள் ஏன் முக்கியம்?*

இந்தப் பின்னணியில்தான் தேர்தல் ஆணையத்துக்குள்ளேயே ஏற்பட்டதாக வெளியாகியுள்ள கருத்து வேறுபாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றது. தேர்தல் ஆணையர்கள் சுக்பீர் சிங் சந்து, விவேக் ஜோஷி ஆகியோர் கடந்த 10 மாதங்களில் குறைந்தது 14 முறை எழுத்துப்பூர்வமாக ஆட்சேபனை

தெரிவித்ததாக செய்தி வெளியிட்டுள்ளது. SIR புதிய வாக்காளர்களுக்கான Form 6 மாற்றம், வாக்காளர் தரவுத்தளத்தின் மையப் படுத்தல் உள்ளிட்ட விவகாரங்களில் அவர்கள் கேள்வி எழுப்பியதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

குறிப்பாக SIR தொடர்பான கூடுதல் அறிவிப்பை Form 6 நடைமுறையில் இணைப்பது சட்ட விதிகளை மாற்றாமல் செய்ய முடியாது என்று விவேக் ஜோஷி ஆட்சேபனை தெரிவித்ததாகவும், பின்னர் சுக்பீர் சிங் சந்து அதற்கு ஆதரவு தெரிவித்த தாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. வாக்காளர் தரவுத்தளத்தின் கட்டுப்பாடு அதிகமாக மையப்படுத்தப்படுவது குறித்தும் கேள்விகள் எழுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### *ஞானேஷ் குமாரை ஏன் நீக்க வேண்டும்?*

SIR நடைமுறை, வாக்காளர் பெயர் நீக்கம், தரவுத்தள நிர்வாகம் ஆகியவற்றில் கடுமையான ஐயங்கள் எழுந்துள்ள நிலை யில் அதற்குப் பொறுப்பான தலைமைத் தேர்தல் ஆணையர் மீது நடவடிக்கை தேவை என அவர்கள் வலியுறுத்துகின்றனர். எதிர்க்கட்சிகள் இரு அவைகளிலும் ஞானேஷ் குமாரை நீக்குவதற்கான நடவடிக்கையை முன்னெடுக்கத் தயாராகி வருகிறார்கள்.

ஆனால் தேர்தல் ஆணையம் இதை ஏற்கவில்லை. உள்நிலை கருத்து வேறு பாடுகள் நிர்வாக ஆலோசனையின் ஒரு பகுதிதான் என்றும் முக்கிய முடிவுகள் முழு ஆணையத்தின் ஒருமித்த முடிவுகளே என்றும் அது தெரிவித்துள்ளது. எனவே 14 ஆட்சேபனைகள் இருப்பது ஒரு தீவிரமான கேள்வி. ஆனால் அதுவே குற்றம் நிரூபிக்கப் பட்டுவிட்டது என்று கூற முடியாது. அதே போல் இது சாதாரண கருத்து வேறுபாடு என்று கூறி கேள்விகளை முடித்துவிடுவதும் போதுமானதல்ல.

தலைமைத் தேர்தல் ஆணையரைப் பதவி நீக்கம் செய்வது அரசியல் முழக்கத்தால் நடக்கக் கூடியது அல்ல. அரசியலமைப்புச்

**27.16 இலட்சம் பெயர்கள் ஏன் நீக்கப்பட்டன?, 22.21 இலட்சம் பேர் ஏன் மீண்டும் சேர்க்கக் கோரி முறையிட்டனர்?, தேர்தலுக்கு முன் 1,607 பேருக்கு மட்டுமே ஏன் நிவாரணம் கிடைத்தது?, இரு தேர்தல் ஆணையர்கள் எழுப்பிய 14 ஆட்சேபனைகளுக்கு என்ன பதில்?**

சட்டத்தின் கீழ் நிரூபிக்கப்பட்ட தவறான நடத்தை அல்லது தகுதியின்மை போன்ற அடிப்படைகளும், நாடாளுமன்றத்தின் உரிய சிறப்பு நடைமுறையும் தேவை.

ஆனால் அதற்கு முன் வெளிப்பட வேண்டியது: 27.16 இலட்சம் பெயர்கள் ஏன் நீக்கப்பட்டன?, 22.21 இலட்சம் பேர் ஏன் மீண்டும் சேர்க்கக் கோரி முறையிட்டனர்?, தேர்தலுக்கு முன் 1,607 பேருக்கு மட்டுமே ஏன் நிவாரணம் கிடைத்தது?, இரு தேர்தல் ஆணையர்கள் எழுப்பிய 14 ஆட்சேப னைகளுக்கு என்ன பதில்?

தேர்தல் என்பது வாக்குப்பதிவு நாளில் மட்டும் நடைபெறுவதல்ல. வாக்காளர் பட்டியலில் ஒரு குடிமகனின் பெயர் பாது காக்கப்படும் தருணத்திலேயே ஜனநாயகம் தொடங்குகிறது. அந்தப் பெயரை நீக்கும் அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்பட்டதா இல்லையா என்பதை விட அது தவறாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதை நிரூ பிக்கும் அளவுக்குத் தேர்தல் ஆணையத்தின் நடைமுறை வெளிப்படையாக இருந்ததா? என்பதே ஞானேஷ் குமார் மீதான பதவி நீக்கக் கோரிக்கையின் மையக் கேள்வி யாகிறது.

• அ. நஜ்முத்தீன்

# நிம்மதியா அமைதியா

## எது அதிகம் தேவை?

**ஆங்கிலேயர்கள் பிரியமானவர்களுக்கு வாழ்த்துக் கூறும் போது Live in Peace எனக் கூறுவார்கள். அதுவே மனிதன் இறந்த பிறகு Rest in Peace எனக் கூறுவார்கள். ஒரு மனிதன் வாழும் போது நிம்மதி தேவை. இறந்த பிறகு எதற்கு நிம்மதி தேவை? அமைதிதான் தேவை.**

**நிம்மதிக்கும் அமைதிக்கும் என்ன வித்தியாசம்? நிம்மதி என்பதும் அமைதி என்பதும் ஒரே மாதிரி தோன்றினாலும் இரண்டிற்கும் வேறுபாடு உள்ளது. நிம்மதி என்பது பிரச்னைகள் இல்லா நிலை.**

### நிம்மதி (Relief / Comfort)

இது வெளிப்புற பிரச்னை குறைந்த போது ஏற்படும் ஓர் தற்காலிக உணர்வு

உதாரணமாக :

1. கடன் முடிந்ததும் ஏற்படுவது நிம்மதி
2. நோய் குணமானதும் ஏற்படுவது நிம்மதி
3. சண்டை முடிந்து சமாதானம் ஏற்படுவது நிம்மதி
4. தேர்வு முடிந்ததும் மாணவர்களுக்கு நிம்மதி
5. அலுவலகத்தில், தொழிற்சாலையில் வேலை முடிந்ததும் நிம்மதி.
6. விமான டிக்கெட் (Air Ticket) இரயில் டிக்கெட் (Train Ticket) பஸ் டிக்கெட் கன்பார்ம் ஆனால் நிம்மதி.
7. சிலருக்கு தினக்கூலி, வாரச் சம்பளம், மாதச் சம்பளம் வாங்கும் போது ஏற்படுவது கூட ஒரு வகையான நிம்மதி.
8. சமையலை முடித்து விட்டால் கூட ஒரு வகையான நிம்மதி பெண்களுக்கு.
9. பொதுக்கூட்டம், மாநாடு, திருவிழாக்கள் போன்ற நிகழ்ச்சிகள் அசம்பாவிதம் எதுவும் இல்லாமல் முடிந்து விட்டால் காவல்துறையினருக்கு ஒரு வகையான நிம்மதி.
10. தினப் பத்திரிகை, வாரப் பத்திரிகை, மாதம் இருமுறை வரும் பத்திரிகை, மாதப் பத்திரிகைகள் நிறைவு பெற்று குறித்த தேதியில் வெளியாகி விட்டால் ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும் நிம்மதி.
11. தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்து விட்டால் அரசியல்வாதிகளுக்கு நிம்மதி.

ஆக நிம்மதி தற்காலிகமானது. நிரந்தரமானது அல்ல.

### அமைதி

வெளியில் பிரச்னை இருந்தாலும் மனம் கலக்கம் அடையாத நிலைதான் அமைதி. அதாவது நீண்ட நாள் நிலைத்திருக்கும் தன்மை கொண்டது அமைதி. இரண்டில் எது தேவை என்றால் இரண்டும் தேவைதான்.

ஆனாலும் மனிதனை ஆழமாகக் காப்பது அமைதியே!

ஒருவன் நிம்மதி இல்லாமல் சில நாள்கள் கூட வாழ முடியும். ஆனால் அமைதியில்லாமல் இருந்தால் மனம் சோர்ந்து போகும். வாழ்க்கையே வெறுப்பாக இருக்கும். திருக்குர்ஆனில் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது அஸ்ஸலாமு அலைக்கும் (உங்களுக்கு அமைதி உண் டாகட்டும்) எனக் கூறுங்கள் என்பதாகக் குறிப் பிடப்பட்டுள்ளது. (இது பிரார்த்தனையும் கூட) (4:86)

அது போல பிறர் வீட்டில் நுழையும் போதும் ஸலாம்(அமைதி உண்டாகட்டும் என) கூறி விட்டு நுழையுங்கள் என்றும் திருக் குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. (24:27-28)

ஒரு மனிதன் நல்லடியாராக இறந்தால், நல்லோராக இருக்கும் நிலையில் அவரின் உயிரை வானவர்கள் கைப்பற்றி உங்கள் மீது ஸலாம் (அமைதி உண்டாகட்டும்) நீங்கள் செய்தவற்றின் காரணமாக சொர்க்கத்தில் நுழையுங்கள் (திருக்குர்ஆன் 16:32) என்று கூறுவார்கள்.

மேலும் சொர்க்கத்தில் நுழையும் போது கூட வானவர்கள் உங்கள் மீது ஸலாம் (அமைதி உண்டாகட்டும்) என்று அதன் காவலர்கள் வரவேற்பார்கள் என்பதாகவும் குர்ஆனில் இறைவன் கூறியுள்ளான். (திருக் குர்ஆன் 39:73)

எல்லாவற்றுக்கும் மேலாக சொர்க்கத்தில் அவர்கள் பேசிக் கொள்வதும் கூட ‘ஸலாமுன் அலைக்கும்’ என்பதாகவே இருக்கும் என திருமறைக் குர்ஆன் கூறுகிறது.

‘அங்கே (சொர்க்கத்தில்) வீணானதையோ, பாவமான சொல்லையோ செவியுற மாட் டார்கள். ஸலாம் - ஸலாம் (அமைதி - அமைதி) என்ற சொல்லைத் தவிர!’ (திருக் குர்ஆன் 56:25-26)

பலரும் ‘எங்கே நிம்மதி? எங்கே நிம்மதி? அங்கே எனக்கு ஓர் இடம் வேண்டும்’ என்று தேடுகிறார்கள். ஆனால் பெரும்பாலும் கிடைப்பதில்லை. அதுவே யார் யாரெல்லாம் எது அமைதி? எங்கே அமைதி? எனத் தேடு கிறார்களோ அவர்களுக்கே சொர்க்கமும் (அமைதியும்) கிடைக்கும். தற்காலிக நிம் மதியை விட நிரந்தர அமைதியைத் தேடுங்கள்.



பலரும் ‘எங்கே நிம்மதி? எங்கே நிம்மதி? அங்கே எனக்கு ஓர் இடம் வேண்டும்’ என்று தேடுகிறார்கள். ஆனால் பெரும்பாலும் கிடைப்பதில்லை. அதுவே யார் யாரெல்லாம் எது அமைதி? எங்கே அமைதி? எனத் தேடுகிறார்களோ அவர்களுக்கே சொர்க்கமும் (அமைதியும்) கிடைக்கும்.

அதாவது வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வுகள் வந்தாலும் மனம் கலங்காமல் இருக்க அமைதி தான் தேவை.

## எது அமைதி?

அமைதி என்பது ஒரே மாதிரி அல்ல. பல வகைகளைக் கொண்டது.

## மன அமைதி

அதிகக் கோபம், கவலை, பயம் இல்லாத நிலை. அதாவது எந்தச் சூழ்நிலையிலும் மனம் கலங்காமல் தெளிவாக இருப்பது.

## மௌன அமைதி

இது தனிமையில்தான் உணர முடியும். அதாவது சத்தம் இல்லாமல் இருப்பது என்பது அல்ல. தேவையற்ற சிந்தனைகளைக் குறைத்துக் கொள்வது.

## உறவு அமைதி

குடும்பம், உறவுகள், நண்பர்களிடம் தேவையற்ற மோதல் (சண்டை சச்சரவுகள்) இல்லாமல் இருப்பது.

இதற்கு முக்கியமாக புரிதல் தேவை. புரிதல் இருந்தால் மதிப்பு, மரியாதை இருக்கும்.

## ஆன்மிக அமைதி

தியானம் (தொழுகை), சிந்தனை, பிரார்த்தனை(துஆ) மூலம் கிடைப்பது. (இதை பலரும் சடங்காகச் செய்கிறார்கள்.

## இயற்கை அமைதி

மரங்கள், மலை, மழை, கடல் சார்ந்த இயற்கையான இடங்களைக் காணும் போது கிடைப்பது அதாவது மனம் அழுத்தம் நீங்கி மகிழ்ச்சியான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்வது.

அல்லாஹ் மனிதர்கள் அமைதியடைய இரண்டு வழிகளைக் கூறியுள்ளான். முதலாவது: இறைவன், மனிதனைப் படைக்கும் போதே ஏற்படுத்தி வைத்துள்ளது.

‘நீங்கள் அமைதி அடையும் பொருட்டு உங்களுக்காக உங்களிலிருந்தே துணைவியரை உருவாக்கினான். மேலும் உங்களுக்குள் அன்பையும், கருணையையும் ஏற்படுத்தினான்’. (திருக்குர்ஆன் 30:21)

மேற்கண்ட வசனத்தில் அமைதி (சகீனா) துணைவியரிலிருந்து கிடைக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. அதாவது கணவன் - மனைவி உறவு வெறும் உடல் இச்சைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக மட்டும் ஏற்படுத்தப் பட்ட உறவு அல்ல. மாறாக மன அமைதி, அன்பு, பாதுகாப்பு இவற்றை ஒருவருக்கு ஒருவர் பகிர்ந்து கொள்வதால் கிடைக்கும் என்பதாகும். துன்பத்தில் ஆறுதல், தவறிலிருந்து திருத்துவது, குடும்பத்தை அமைதியாக வைத்திருப்பதையும் மேலும் ஈமான் (இறைநம்பிக்கை) மேன்மை அடையவும் ஏற்படுத்தப்பட்டதாகும்.

இரண்டாவது : நிலையான, உண்மையான அமைதி எதுவென்றால், ‘அல்லாஹ்வை நினைவுகூர்வதினாலேயே உள்ளங்கள் அமைதியடைகின்றன’ (திருக்குர்ஆன் 13:28)

முழு அமைதி அல்லாஹ்வை நினைவு கூர்வதால் மட்டுமே கிடைக்கக் கூடியது.

எனவே எப்பொழுதும் (எல்லா நிலையிலும்) இறைவனை நினைவு கூர்ந்து அமைதி பெறுவோம்.

# டாலரை விட்டு விலகும் உலக நாடுகள்



**- பெரணமல்லூர் சேகரன்**

**இன்றைய உலக நிதிச் சந்தையில் அரசியல் தலைவர்களின் வார்த்தைகளை விட மத்திய வங்கிகளின் ரகசிய நகர்வுகள்தான் பொருளாதார உண்மைகளை நமக்கு உரக்கச் சொல்கின்றன. அமெரிக்காவின் பிடியிலிருந்து உலக நாடுகள் எப்படி மெல்ல நழுவுகின்றன என்பதை விளக்கும் ஒரு விரிவான பார்வை இது.**

அண்மையில் நெதர்லாந்து நாடு அமெரிக்கா, கனடாவில் இருந்த தனது தங்கத்தை மிக அமைதியாக வெளியேற்றி லண்டனுக்கு மாற்றியுள்ளது. சுமார் 12 பில்லியன் டாலர் மதிப்புள்ள 86 டன் தங்கம் எந்தவித ஆரவாரமும் இன்றி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. பல தசாப்தங்களாக, உலக நாடுகள் தங்கள் நாட்டு தங்கத்தை அமெரிக்காவின் நியூயார்க் Federal Reserve வங்கியிலும் கனடாவிலும் பாதுகாப்பாக வைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தன. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக (குறிப்பாக உக்ரைன் போருக்குப் பிறகு ரஷ்யாவின் வெளிநாட்டுச் சொத்துகள் அமெரிக்காவால் முடக்கப்பட்ட நிகழ்வுக்குப் பிறகு) உலக நாடுகளின் பார்வை முற்றிலும் மாறியது.

அமெரிக்காவின் கொள்கைகளுக்கு எதிராகச் செயல்படும் நாடுகளின் நிதிச் சொத்துகளை ஒரே கிளிக்கில் முடக்க முடியும் (Sanctions and Asset Freezes) என்ற நிலை உருவாக்கப்பட்டபோது அமெரிக்காவின் Federal Reserveஇல் இருக்கும் தங்களுடைய தங்கம் கூட இனி முற்றிலும் பாதுகாப்பானதல்ல என்ற ஐயம் ஐரோப்பிய நாடுகளுக்குள் எழுந்தது.

நெதர்லாந்து 86 டன் தங்கத்தையும், பிரான்ஸ் 129 டன் தங்கத்தையும் நியூயார்க்கிலிருந்து ரகசியமாகத் திரும்பப் பெற்றமை இதற்குச் சிறந்த சான்றாகும். அதிகாரப்பூர்வமாக இது தளவாடப் பாதுகாப்பு(Crisis preparedness Logistics) என்று கூறப்பட்டாலும் உண்மை என்னவென்றால் அமெரிக்க அதிகார வரம்பிலிருந்து தங்கள் நாட்டின் மிக மதிப்புமிக்க சொத்தை வெளியே கொண்டு செல்வதே இதன் பிரதான நோக்கமாகும்.

டச்சு மத்திய வங்கியான DNB (De Nederlandsche Bank) கடந்த செப்டம்பர் 2ஆம் தேதி ஒரு பெரிய உண்மையை ஒப்புக்கொண்டது. இந்த ஆண்டின் மார்ச் முதல் ஆகஸ்ட் மாதத்திற்குள் அது 86 மெட்ரிக் டன் தங்கத்தை இடம் மாற்றியுள்ளது. மதிப்பீட்டின்படி 86 டன் தங்கத்தின் மதிப்பு சுமார் 12 பில்லியன் டாலர்கள் என்பதே அந்தச் செய்தி. இதில் வியப்பு என்னவென்றால் சுமார் 21 டன் தங்கம் விமானம் மூலம் அமெரிக்கா, கனடாவிலிருந்து Zeist என்ற சிறிய நகருக்கு அருகில் உள்ள இரகசிய இராணுவத் தளத்திற்கு முதலில் கொண்டு செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து லண்டனுக்கு மாற்றப்பட்டது. மீதமுள்ள 65 டன் தங்கம் நியூயார்க்கிலேயே விற்கப்பட்டு அந்தப் பணத்தைக் கொண்டு லண்டனில் புதிய தங்கம் வாங்கப்பட்டது.

இதை ஏன் இவர்கள் இவ்வாறு இரகசியமாகச் செய்ய வேண்டும்? டச்சு மத்திய

வங்கியின் ஆளுநர் Olaf Sleijpen இதற்கு விளக்கம் அளித்தார். அவருடைய கூற்றுப்படி லண்டனில் உள்ள தங்கம்தான் உலகிலேயே மிக எளிதாக வணிகம் செய்யக்கூடியது(Most easily tradable gold). ஒருவேளை அவசர காலம்(Crisis) ஏற்பட்டால் அதை உடனடியாக விற்றுப் பயன்படுத்த முடியும் என்றார்.

நெதர்லாந்து மட்டுமா இந்தச் செயலில் ஈடுபட்டது என்றால் அதுதான் இல்லை. பிரான்சின் மத்திய வங்கியும் கிட்டத்தட்ட இதே போன்றதொரு காரியத்தை மிக அமைதியாகச் செய்துள்ளது. 2025 ஜூலைக்கும் 2026 ஜனவரிக்கும் இடைப்பட்ட காலத்தில் பிரான்ஸ் தனது 129 டன் தங்கத்தை நியூயார்க்கிலிருந்து ரகசியமாகத் திரும்பப் பெற்றது. இது பிரான்சின் மொத்த தங்க இருப்பில் 5 விழுக்காடாகும்.

ஐரோப்பாவின் மிகவும் எச்சரிக்கையான இந்த இரண்டு நிதி நிறுவனங்களும் அடுத்தடுத்து ஒரே மாதிரியான முடிவை எடுத்திருப்பது வெறும் சாதாரண நிகழ்வு அல்ல. இதுவொரு தெளிவான உலக பொருளாதார மாற்றம் தொடர்பான Signal ஆகும். ஏன் திடீரென இவ்விரு நாடுகளும் தங்கள் தங்கங்களை மீளப் பெற்றுக் கொள்கின்றன என நீங்கள் நினைக்கலாம்.

அண்மைக்கால உலக அரசியல் நிகழ்வுகள் ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரு பெரிய எச்சரிக்கையை விடுத்துள்ளன. உக்ரைன் போரைத் தொடர்ந்து ரஷ்யாவின் பல நூறு பில்லியன் டாலர் மதிப்புள்ள வெளிநாட்டுச் சொத்துகளை அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் ஒரே நொடியில் முடக்கின. எந்தவொரு நாடாவது அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கைகளுக்கு எதிராகச் செயல்பட்டால் அமெரிக்காவில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள அந்த நாட்டின் சொத்துகளும் தங்கமும் பாதுகாப்பாக இருக்காது என்ற கடுமையான அச்சம் ஐரோப்பிய நாடுகளுக்குள் எழுந்துள்ளது.

நெதர்லாந்து, பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளும் பாரம்பரியமாக அமெரிக்காவுடன் நட்பில் இருந்தாலும், ‘எங்கள் நாட்டின் இறுதிப் பாதுகாப்பு அரணான தங்கத்தை மற்றொரு நாட்டின் கட்டுப்பாட்டில் வைப்பது ஆபத்தானது’ என்ற எச்சரிக்கை உணர்வின் காரணமாகவே இந்த மீட்கும் படலத்தை ரகசியமாக அரங்கேற்றின. உலகளாவிய பொருளாதார நிலையற்ற தன்மையும், போர்ச் சூழல்களும் அதிகரித்து வரும் தற்காலத்தில் தங்கத்தைத் தங்களுக்கு மிக அருகில் அல்லது எளிதில் கையாளக் கூடிய லண்டன் போன்ற பாதுகாப்பான மையங்களுக்கு மாற்ற வேண்டிய அவசியத்தை இந்தச் சூழல் ஏற்படுத்தியது.

ஐரோப்பிய நாடுகள் பகிரங்கமாக அமெரிக்க டாலரை எதிர்க்காவிட்டாலும் அமெரிக்க டாலர், நியூயார்க் நிதிச் சந்தையை மட்டும் முழுமையாக நம்பியிருக்கும் நிலையை மாற்ற விரும்புகின்றன. தங்கள்

**எந்தவொரு நாடாவது அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கைகளுக்கு எதிராகச் செயல்பட்டால் அமெரிக்காவில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள அந்த நாட்டின் சொத்துகளும் தங்கமும் பாதுகாப்பாக இருக்காது என்ற கடுமையான அச்சம் ஐரோப்பிய நாடுகளுக்குள் எழுந்துள்ளது.**



நாட்டின் சொத்துகளை அமெரிக்காவின் பிடியிலிருந்து சிறிது சிறிதாக வெளியேற்றுவதன் மூலம் தங்களது பொருளாதாரச் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ள முயல்கின்றன.




ஐரோப்பாவின் மிகவும் பழமைவாத, கவனமாகச் செயல்படக்கூடிய இரண்டு மத்திய வங்கிகள் (நெதர்லாந்து, பிரான்ஸ்) ஒரே காலகட்டத்தில் இந்த முடிவை எடுப்பது என்பது வெறும் தற்செயல் நிகழ்வு அல்ல. இது அமெரிக்க டாலர் மையப்படுத்தப்பட்ட உலக அமைப்பின் மீதான மறைமுக எதிர்ப்பும், தங்கத்தை மையமாகக் கொண்ட பாதுகாப்பான மாற்று ஏற்பாட்டை நோக்கிய நகர்வும் ஆகும். சுருக்கமாகச் சொன்னால் உலகம் De-Dollarisation நோக்கியே செல்கிறது.

De-Dollarisation என்பது ஒரே இரவில் அமெரிக்க டாலரைத் தூக்கி எறிந்துவிட்டு வேறு ஒரு கரன்சியை ஏற்பது அல்ல. மாறாக உலக நாடுகள் டாலர் மீதான தங்களது பல தசாப்த கால குருட்டு நம்பிக்கையைக் கைவிட்டு எந்தவொரு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலும் இல்லாத தங்கத்தை தங்களது இறுதிப் பாதுகாப்பு அரணாக மாற்றுவதே உண்மையான De-Dollarisation ஆகும்.

நெதர்லாந்து (86 டன்), பிரான்ஸ் (129டன்) நாடுகள் தங்களுடைய கோடிக்கணக்கான மதிப்புள்ள தங்கத்தை நியூயார்க்கிலிருந்து ரகசியமாகத் திரும்பப் பெற்றது இந்த De - Dollarisation துரிதப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. இந்த ஐரோப்பிய நாடுகள் தற்போது வெளியேற்றக் காரணம் வெறும் தற்செயல் அல்ல, இது டாலர் சார்ந்த அமைப்பிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் ஒரு வியூகம்.

இதன் மூலம் அமெரிக்காவின் நேரடி நிதி அதிகாரத்திலிருந்து தங்கள் நாட்டின் மிக மதிப்புமிக்க சொத்தை அவர்கள் விடுவித்துக் கொண்டுள்ளனர். இது டாலர் கட்டமைப்பின் மீதான நேரடியான அவநம்பிக்கையை தெளிவாகக் காட்டுகிறது. ஐரோப்பாவின் மிகவும் எச்சரிக்கையான இந்த இரண்டு மத்திய வங்கிகள் ஒரே காலகட்டத்தில் இந்த முடிவை எடுப்பது, 'அமெரிக்க டாலர் மையப்படுத்தப்பட்ட தற்போதைய நிதி அமைப்பு இனி பாதுகாப்பானதல்ல' என்பதை உலகிற்குச் சொல்லாமல் சொல்லும் செய்தியாகவே பார்க்க வேண்டும்.

மத்திய வங்கிகள் டாலரை விடுத்து தங்கத்தைக் குவிப்பதன் மூலமும் அதனைச் சொந்தக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதன் மூலமும் என்ன உணர்த்துகின்றனவெனில் தங்கம் என்பது எந்தவொரு தனிப்பட்ட அரசாங்கத்திற்கும் கட்டுப்படாத, எவராலும் முடக்க முடியாத(Sanctions மூலம் முடக்கம் செய்ய முடியாத) ஒரே சொத்து என்பதையும் உலகம் இனி ஒற்றை டாலர் நாணயத்தின் கீழ் இயங்காது என்றும் பலமுனை நிதி உலகத்தின் (Multi-polar Financial System) படியே இயங்கும் என்பதையும் இந்த இரு நாட்டு மத்திய வங்கிகளின் இந்தப் பயணம் திட்டவட்டமாக நிரூபிக்கிறது.

அமெரிக்க அரசியல்வாதிகள் டாலரின் பலத்தைப் பற்றிப் பேசலாம். ஆனால் மத்திய வங்கிகளின் 'தங்கம் மீளப்பெறுதல்கள்' உலகப் பொருளாதாரம் எவ்வளவு வேகமாக அதலபாதாளத்திற்குச் செல்கிறது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. டாலரின் ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் இந்த அமைதியான De-Dollarisation புரட்சி உலக நிதி வரலாற்றின் மிகப்பெரிய திருப்புமுனையாக இருக்கும் என்பதில் மாற்றமில்லை.

# அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானது!

**மனிதர்களே! அல்லாஹ் உங்கள் மீது பொழிந்துள்ள அருட்பேறுகளை நினைவில் வையுங்கள்.[6] வானம் மற்றும் பூமியிலிருந்து உங்களுக்கு வாழ்வாதாரம் அளிக்கின்ற படைப்பாளன் அல்லாஹ் வைத் தவிர வேறு யாரும் இருக்கின்றாரா? - வணக்கத்திற்குரியவன் அவனைத் தவிர வேறு யாரு மில்லை. பிறகு எங்கிருந்து நீங்கள் ஏமாற்றப்படுகின்றீர்கள்?[7] (நபியே!) இப்பொழுது இவர்கள் உம்மைப் பொய்யர் என்று தூற்றுகின்றார்கள்[8] (என்றால் இது புதிய விஷயமல்ல). உமக்கு முன்பும் தூதர்கள் பலர் பொய்யர்கள் என்று தூற்றப்பட்டிருக்கின்றார்கள். மேலும் அனைத்து விவகாரங்களும் இறுதியில் அல்லாஹ்விடம்தான் திரும்பக் கொண்டு வரப்பட இருக்கின்றன.[9]**

**மனிதர்களே! திண்ணமாக, அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானது.[10] எனவே உலக வாழ்க்கை உங்களை ஏமாற்றத்தில் ஆழ்த்திட வேண்டாம்.[11] மேலும், அந்தப் பெரும் ஏமாற்றுக்காரனும் உங்களை அல்லாஹ்வின் விஷயத்தில் ஏமாற்றிவிட வேண்டாம்.[12]**

**● அத்தியாயம் 35 ஃபாத்திர் ● திருவசனங்கள் : 3 - 5**

**6.** நன்றி கெட்டதனமாக நடந்து கொள்ளாதீர்கள். உப்பிட்டவருக்குத் துரோகம் செய்கின்ற இழிவான நடத்தையை மேற்கொள்ளாதீர்கள். உங்களுக்கு என்னவெல்லாம் கிடைத்திருக்கின்றனவோ அவையனைத்துமே அல்லாஹ் அருளியவைதாம் என்கிற உண்மையை ஒருபோதும் மறந்துவிட வேண்டாம்.

வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், எவரெல்லாம் அல்லாஹ்வைத் தவிர மற்றவற்றை வழிபடுகின்றாரோ, மற்றவர்களுக்கு அடிபணிந்தும் கீழ்ப்படிந்தும் வழிபட்டும் நடக்கின்றாரோ, அல்லது ஏதேனும் ஓர் அருள்வளம் கிடைத்ததும் அதனை அல்லாஹ் அல்லாத மற்றவர்களால் அருளப்பட்ட பிச்சையாகக் கருதுகின்றாரோ, அல்லது ஏதேனும் அருள்வளம் கிடைத்ததும் அதற்காக அல்லாஹ் அல்லாத மற்றவர்களுக்கு நன்றி செலுத்துகின்றாரோ அல்லது ஏதேனும் ஓர் அருள்வளத்தைக் கேட்டுப் பெறுகின்ற நோக்கத்துடன் அல்லாஹ் அல்லாத மற்றவர்களிடம் பிரார்த்திக்கின்றாரோ அவர் உண்மையில் மிகப் பெரும் நன்றிகெட்ட மனிதர் ஆவார்.

**7.** முதல் வாசகத்துக்கும் இரண்டாவது வாசகத்துக்கும் இடையில் ஒரு நுட்பமான வெற்றிடம் இருக்கின்றது. அதனை உரையின் சந்தர்ப்பமும் சூழலுமே பூர்த்தி செய்துவிடுகின்றது.

இதனைப் புரிந்துகொள்வதற்கு முதலில் இந்த உரை இணைவைப்பாளர்களுக்கு முன்னால் நிகழ்த்தப்படுகின்றது என்கிற சித்திரத்தை மனக் கண்ணுக்கு முன்னால் கொண்டு வாருங்கள். பேச்சாளர் அந்த மக்களைப் பார்த்து அல்லாஹ்வைத்தவிர வேறு படைப்பாளர் எவரேனும் இருக்கின்றாரா, உங்களைப் படைத்ததோடு நின்றுவிடாமல் வானங்களிலிருந்தும் பூமியிலிருந்தும் உங்களுக்கான வாழ்வாதாரங்கள் தடையின்றி கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்பவர் எவரேனும் இருக்கின்றாரா என்று வினவுகின்றார்.

இந்தக் கேள்வியை எழுப்பிய பிறகு பேச்சாளர் சில விநாடிகள் நிறுத்தி பதிலுக்காகக் காத்திருக்கின்றார். ஆனால் ஒட்டுமொத்தக் கூட்டமும் வாயடைத்து மௌனமாக நிற்பதைப் பார்க்கின்றார். அல்லாஹ்வைத் தவிர வேறு படைப்பாளரும் வாழ்வாதாரங்களை அருள்பவரும் இருக்கின்றார்கள் என்று எவருமே சொல்வதில்லை.

இதிலிருந்து அல்லாஹ்வைத் தவிர வேறு எவருமே படைப்பாளனாகவோ வாழ்வாதாரங்களைத் தருபவராகவோ இல்லை என்பதை அங்கிருந்த மக்கள் கூட்டம் உணர்ந்தே இருந்தார்கள் என்பது தெளிவாகி விடுகின்றது.

28ஆம் பக்கம் பார்க்க...

**● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்**

# நீங்கள் அறிந்து கொண்டால்..!

**நபி(ஸல்) கூறினார்கள்: 'என்னுடைய உயிர் எவனுடைய கையில் இருக்கின்றதோ அவன் மீது சத்தியமாக! நான் அறிந்திருப்பதை நீங்கள் அறிந்து கொண்டீர்களானால் அதிகமாக அழுவீர்கள்; குறைவாகவே சிரிப்பீர்கள்'**

அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா(ரலி) நூல் : புகாரி

எப்படிப்பட்ட தேர்வுக்கும் சோதனைக்கும் தாம் ஆளாக்கப்பட்டுள்ளோம் என்பதையும் இனி வரக்கூடிய வாழ்வில்(மறுமையில்) என்னென்ன நிலைமைகளையும் விவகாரங்களையும் எதிர்கொள்ள நேரிடும் என்பதையும் பற்றிய முழுமையான அறிவும் விழிப்பு உணர்வும் ஒருவருக்குக் கிடைத்து விட்டதெனில் அவர் ஒருபோதும் இந்த உலகில் அலட்சியமாக நாள் களைக் கடத்தவோ மனம் போன போக்கில் வாழவோ மாட்டார்; வாழவே இயலாது. அது மட்டுமல்ல அவர் எத்தகைய பயத்துக்கும் பீதிக்கும் ஆளாவார் எனில் அவரால் ஒரு நிமிடம் கூட நிம்மதியாக இருக்க முடியாது. அவருக்கு மற்ற எல்லாவற்றையும்விட மறுமை பற்றிய கவலைதான் மிக அதிகமாக இருக்கும். ஆட்டிப் படைக்கும். இறைவனின் கோபத்தை நினைத்து அவர் குலை நடுங்கிப் போவார். தவித்து துடித்துப் போவார்.

இறைவன் எந்தத் தேவையும் இல்லாதவன் என்பதையும் அந்த நாளில் குற்றவாளிகளுக்கும் பாவிகளுக்கும் உதவுவதற்கோ, துணை நிற்பதற்கோ எவருமே இருக்க மாட்டார்கள் என்பதையும் அவன் அறிவான். எந்தப் பரிந்துரையும் கைகொடுக்காது; பரிந்துரைப்பவர் என்று எவருமே இருக்க மாட்டார்கள் என்பதையும் அவன் அறிவான்.

இந்த உலக வாழ்வுக்குப் பிறகு என்னென்னவெல்லாம் நடக்க இருக்கின்றன என்பவற்றைப் பற்றிய அறிவும் விழிப்பு உணர்வும் இறைத்தூதருக்கு இருப்பதைப் போன்று ஓர் எளிய மனிதருக்கும் கிடைத்துவிட்டதெனில் அதன் பிறகு அந்த மனிதரின் சிரிப்பு சுருங்கிவிடும்; அவருடைய கண்களோ எந்நேரமும் கலங்கியும் கண்ணீர் சிந்தியவாறும் இருக்கும்.

# கருணையே மேலோங்கும்!

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'இறைவன் உலகத்தையும் படைப்புகளையும் படைத்த போது தன்னுடைய ஏட்டில் எழுதினான் - அவன் தன்னைப் பற்றியே எழுதினான் - மேலும் அது (அந்த ஏடு) அர்ஷில் அவனிடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது. - என்னுடைய கோபத்தின் மீது என்னுடைய கருணை மேலோங்கி இருக்கும்'.**

அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா(ரலி) நூல் : புகாரி

தன்னுடைய கருணையை தன்னுடைய கோபத்தின் மீது மேலோங்கச் செய்வதுதான் தொடக்கத்திலிருந்தே அல்லாஹ்வின் நடைமுறையாக இருந்து வந்துள்ளது. அவனுடைய கருணை அளவிட முடியாதது; எண்ணிலடங்காதது. அவனுடைய கருணையின் தாக்கங்களை இந்தப் பேரண்டம் முழுவதிலும் திரும்புகின்ற திசையெங்கும் பார்க்க முடியும்.

அக்கிரமக்கார சமூகங்களுக்கு தம்மைத்தாமே திருத்திக் கொள்வதற்கான முழுமையான வாய்ப்புகளையும் அவகாசத்தையும் இறைவன் அருளினான். இதனை அவனுடைய கருணை என்பதைத் தவிர வேறு என்னவென்று சொல்ல முடியும். ஒரு சமூகம் அக்கிரமங்களிலும் கொடுமைகளிலும் உரிமைப் பறிப்புகளிலும் எல்லை மீறிச் சென்று இந்தப் பூவுலகிலிருந்து அதனை முற்றாக அழித்தொழிப்பது தவிர்க்க முடியாததாய் ஆகிவிடுகின்ற போதுதான் அந்தச் சமூகத்தின் மீது அவனுடைய வேதனையும் கோபமும் இறங்குகின்றது.

**நபிமொழி விளக்கம் ✦ மௌலானா முஹம்மத் ஃபாரூக்கான் ✦ தமிழில் : அபூ ஹானியா**

26 ஆம் பக்கத் தொடர்ச்சி...

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் பேச்சாளர் ‘வணக்கத்துக்கும் வழிபாட்டுக்கும் உரித்தானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவருமே ஆகிவிட முடியாது’ என்று ஓங்கி முழங்குகின்றார். ‘அல்லாஹ் மட்டுமே படைப்பாளனாகவும் வாழ்வாதாரங்களை வழங்குபவனாகவும் இருப்பான்; ஆனால் வணக்கத்துக்கும் வழிபாட்டுக்கும் உரித்தானவர்களாக அல்லாஹ்வைத் தவிர மற்றவர்கள் ஆகிவிடுவார்கள் என்கிற மயக்கத்துக்கு நீங்கள் ஆனதெப்படி? எங்கிருந்து நீங்கள் ஏமாற்றப்படுகின்றீர்கள்’ என்றும் அவர் கேட்கின்றார்.

**8.** ‘வணக்கத்திற்கும் வழிபாட்டுக்கும் உரித்தானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவருமில்லை’ என்கிற உம்முடைய பேச்சை அவர்கள் ஏற்க மறுக்கின்றார்கள். மேலும் இறைவனின் தூதர் என்று பொய்யாக வாதிட்டுக் கொண்டு களம் இறங்கியிருப்பதாக உம் மீது குற்றம் சுமத்துகின்றார்கள்.

**9.** மக்கள் ஒருவரைப் பொய்யர் என்று சொன்னாலே அவர் உண்மையிலேயே பொய்யர் ஆகிவிடுகின்ற அளவுக்குத் தீர்ப்பு வழங்குகின்ற அதிகாரம் மக்களிடத்தில் இல்லை. தீர்ப்பு வழங்குகின்ற அதிகாரமோ அல்லாஹ்விடத்தில்தான் இருக்கின்றது. அவன்தான் இறுதியில் யார் பொய்யராக இருந்தார்கள் என்பதை அறிவிப்பான். மேலும் உண்மையிலேயே பொய்யராக இருந்தவர்களுக்கு அவர்களுக்கான கதியையும் காண்பிப்பான்.

**10.** வாக்குறுதி என்பது மறுமைக்கான வாக்குறுதியைக் குறிக்கும். அது குறித்து இதற்கு முந்தைய வாசகத்தில் ‘அனைத்து விவகாரங்களும் இறுதியில் அல்லாஹ்விடம்தான் திரும்பக் கொண்டு வரப்பட இருக்கின்றன’ என்கிற வாசகத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

**11.** ‘எல்லாமே இந்த உலகம் மட்டும்தான்; இதற்குப் பிறகு நம்முடைய செயல்கள் அனைத்துக்கும் கணக்குக் காட்ட வேண்டிய எந்தவொரு மறுமையும் வரப்போவதில்லை’ என்கிற ஏமாற்றத்திலோ ‘அப்படியும் மறுமை என்று ஒன்று வருமேயானால் இன்று இந்த உலகத்தில் என்னென்ன இன்பங்களையெல்லாம் ருசித்துக் கொண்டிருக்கின்றோமோ அவை அனைத்தும் அந்த மறுமையிலும் ருசித்துக் கொண்டிருப்போம்’ என்கிற ஏமாற்றத்திலோ ஆழ்ந்திட வேண்டாம்.

**12.** ‘பெரும் ஏமாற்றுக்காரன்’ என்பது இங்கு ஷைத்தானைக் குறிக்கும். இதற்குப் பிறகு வரக்கூடிய வாசகம் இதைத்தான் உணர்த்துகின்றது.

மேலும் ‘அல்லாஹ்வின் விஷயத்தில்’ ஏமாற்றத்தில் ஆழ்த்துவது என்பது ‘இறைவன் என்று எவருமே இல்லை; அறவே இல்லை’ என அந்த ஷைத்தான் ஒரு சிலரை நம்பச் செய்துவிடுவதாகும்.

இன்னும் ஒரு சிலரையோ ‘இறைவன் ஒரு தடவை இந்த உலகத்தைப் படைத்து இதனை இயங்கச் செய்துவிட்ட பிறகு எங்கோ சென்று அமர்ந்துவிட்டான். இப்போது அவனுக்கும் அவனால் படைக்கப்பட்ட இந்தப் பேரண்டத்துக்கும் நடைமுறையில் எந்தவிதமான தொடர்பும் இல்லை’ என்கிற தவறான கருத்துக்கு ஆளாகச் செய்து விடுவதாகும்.

இன்னும் சிலரையோ ‘இறைவன் என்னவோ இந்தப் பேரண்டத்தை இரவு பகலாக நிர்வகித்துக் கொண்டு தான் இருக்கின்றான். அதில் எந்த ஐயத்துக்கும் இடமில்லை. ஆனால் அவன் மனிதர்களை வழிகாட்டுவதற்கான எந்தவொரு பொறுப்பையும் தம் கைவசம் எடுத்துக்கொள்ளவில்லை. எனவே இந்த வஹி, தூதுத்துவம் பற்றிய பேச்செல்லாம் சுத்தமான மோசடிதான்’ என்று அடித்துச் சொல்லி அவன் மயக்கத்தில் ஆழ்த்தி விடுவதாகும்.

மேலும், இன்னும் சிலருக்கோ ‘அல்லாஹ் மிகப் பெரும் மன்னிப்பாளனாகவும் இணையிலாக் கிருபையுடையவனாகவும் இருக்கின்றான். நீங்கள் எத்தனையெத்தனை பாவங்களைச் செய்தாலும் அவை அனைத்தையும் அவன் மன்னித்துவிடுவான். அவனுடைய விருப்பத்துக்குரிய சில அடியார்கள் இருக்கின்றார்கள். அவர்களை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொண்டாலே போதும், கரை சேர்ந்துவிடலாம்’ என்றெல்லாம் சொல்லி அவர்களைப் பொய்யான எதிர்பார்ப்புகளில் ஆழ்த்திவிடுவதாகும்.

(தொடரும்)

**மொகலாயப் பேரரசர்களில் பாபருக்குப் பிறகு அதிகம் விமர்சனத்திற்கு உள்ளானவர் மன்னர் ஔரங்கஜேப் ஆலம்கீர். பாபர் அயோத்தியில் இராமர் கோயிலை இடித்து விட்டு அந்த இடத்தில் பாபரி மஸ்ஜித் கட்டினார் என்று கூறினர். ஆனால் ஔரங்கஜேப் மத சகிப்புத் தன்மையற்றவர், இந்துக்களின் மீது ஜிஸ்யா வரியை விதித்தவர், பல கோயில்களை இடித்தவர் என்ற குற்றச்சாட்டுகள் சில வரலாற்று ஆசிரியர்களால் (குறிப்பாக சாதுநாத் சர்க்கார்) பல்லாண்டு காலமாகக் கூறப்பட்டு வருகின்றன.**

### *யார் இந்த ஔரங்கஜேப் ஆலம்கீர்?*

மன்னர் ஷாஜகானுக்குப் பிறகு மொகலாயப் பேரரசின் ஆட்சிக்கு வந்தவர் ஔரங்கஜேப் ஆலம்கீர். அக்பர் காலத்திலிருந்தே மொகலாயப் பேரரசின் மன்னர்கள் இராஜபுத்திர வகுப்பைச் சார்ந்த பெண்களைத் திருமணம் செய்து கொண்டிருந்தனர். மன்னர் அக்பர் இராஜபுத்திர மன்னர் பிகாரி மாலின் மகளைத் திருமணம் செய்து கொண்டார். இந்தத் தாய்க்குப் பிறந்தவரே மன்னர் ஜஹாங்கீர் (சலீம்). மன்னர் ஜஹாங்கீரும் ராஜபுத்திர மன்னர் பகவான் தாஸ் மகளைத் திருமணம் செய்து கொண்டார். இரண்டாவதாக ராஜா உதயசிங்கின் மகளைத் திருமணம் முடித்துக் கொண்டார்.

**மொகலாயப் பேரரசு**
**- சில வரலாற்றுச் செய்திகள் 2**

# தவறாகச் சித்திரிக்கப்பட்ட மொகலாய மன்னர் ஔரங்கஜேப்

**- சேயன் இப்ராகிம்**



ஷாஜகானுக்குப் பிறந்தவர் மன்னர் ஔரங்கஜேப். எனவே அக்பர் ஆட்சிக் காலத்திலிருந்தே மொகலாய மன்னர்களுக்கும், இராஜபுத்திர மன்னர்களுக்குமிடையில் திருமண உறவுகள் ஏற்பட்டு இரத்தக் கலப்பும் ஏற்பட்டு விட்டது. ஷாஜகானுக்குப் பிறகு தனது சகோதரர்களை வென்று ஆட்சிக்கு வந்த ஔரங்கஜேப் கி.பி.1658ஆம் ஆண்டு முதல் கி.பி. 1707ஆம் ஆண்டு வரை சுமார் 49 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தார். கிட்டத்தட்ட மன்னர் அக்பரும் 49 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தார்.

மன்னர் ஔரங்கஜேப் ஆட்சிக் காலத்தில் மிகப் பெரும் நிலப்பரப்பு அவரது ஆட்சியின் கீழ் இருந்தது. இன்றைய இந்தியா, வங்கதேசம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய ஒரு பெரும் நிலப்பரப்பு அவரது ஆளுகையின் கீழ் இருந்தது. சுருங்கக் கூறின் தென்னகத்தின் தமிழ்நாடு, கேரளா தவிர அன்றைய இந்தியாவின் அனைத்துப் பகுதிகளையும் கொண்ட ஒரு பெரும் பேரரசை அவர் கட்டி ஆண்டார்.

மன்னர் ஔரங்கஜேப் மிக எளிமையானவர். எந்தவிதமான ஆடம்பரத்தையும் விரும்பாதவர். தனது சொந்தச் செலவுக்காக அரசு கருவூலத்திலிருந்து பணத்தை எடுக்காதவர். தானே செய்த குல்லாக்களை (தொப்பிகளை) விற்ற பணத்திலிருந்துதான் தனது ஜனாஸா

நல்லடக்கச் செலவுகளைச் செய்ய வேண்டுமென எழுதி வைத்து விட்டு இறந்து போனவர். இப்படிப் பல வரலாற்றாசிரியர்கள் அவரின் சீரிய பண்புகளை எழுதி வைத்துள்ளனர். இவை யாவும் நாம் அறிந்த செய்தியே.

எனினும் சில வரலாற்றாசிரியர்கள் அவர் மீது கீழ்க்கண்ட குற்றச்சாட்டுகளைச் சுமத்துகின்றனர்.

1. அவர் இந்துக்களின் மீது ஜிஸ்யா வரியை விதித்தார்.
2. இந்துக் கோயில்களை இடித்தார்.
3. சமய சகிப்புத்தன்மையற்றவராக இருந்தார். இந்து சமய மக்களைக் கொடுமைப் படுத்தினார்.

இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து விரிவாக அலசுவோம்.

### *1. ஜிஸ்யா வரி*

கி.பி.1658ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஔரங்கஜேப் கி.பி.1679 (கிட்டத்தட்ட 21 ஆண்டுகளுக்குப் பிறகு) ஜிஸ்யா வரியை விதித்தார். அது போல முஸ்லிம்களும் தங்களது ஆண்டு வருமானத்தின் இரண்டரை விழுக்காட்டை ஜகாத் வழங்க வேண்டுமென உத்தரவிட்டார். ஜிஸ்யா வரியைச் செலுத்தும் இந்து மக்கள் இராணுவத்தில் சேர வேண்டியதில்லை. ஆனால் அவர்களின் பாதுகாப்பை அரசாங்கம் உறுதி செய்யும்.

முஸ்லிம்களைப் பொறுத்த அளவில் அவர்கள் ஜகாத்தும் கொடுக்க வேண்டும், அரசாங்கம் கட்டாய இராணுவ சேவைக்கு அழைத்தால் செல்ல வேண்டும். இதுததான் வேறுபாடு. இஸ்லாமிய நெறிமுறைகளின்படி ஓர் அரசு என்ன செய்ய வேண்டுமோ அதைத் தான் ஔரங்கஜேப் செய்தார். பெண்கள், குழந்தைகள், அடிமைகள், மாற்றுத் திறனாளிகள், துறவிகள், நிலமற்றவர்கள், யாசகர்கள் ஆகியோர் ஜிஸ்யா வரி செலுத்த வேண்டியதில்லை. இந்து ஆண்களிடமிருந்து மட்டுமே மிகக் குறைந்த தொகையாக ஜிஸ்யா வரி விதிக்கப்பட்டிருந்தது.

ஜிஸ்யா வரி விதிப்பிற்கு முன்னர் அவர் இந்துக்களுக்குக் காலம் காலமாக விதிக்கப்

**மன்னர் ஔரங்கஜேபும் சரி அவருக்கு முன்னரும் பின்னரும் வந்த மொகலாயப் பேரரசர்களும் சரி, தாங்கள் வென்ற இந்தியாவில் எந்தவிதமான அழிப்பு வேலைகளிலும் ஈடுபட வில்லை. இந்த நாட்டையே தங்களது சொந்த நாடாக ஆக்கிக் கொண்டார்கள்.**

பட்டிருந்த சில வரிகளையும், சில பொது வரிகளையும் ரத்து செய்திருந்தார். அவையாவன:

1. கங்கையில் குளிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த வரி
2. இறந்து போனவர்களின் அஸ்தியைக் கங்கையாற்றில் கரைப்பதற்குப் போடப் பட்டிருந்த வரி
3. மக்கள் அடுப்பு எரிக்கப் பயன்படுத்தி வந்த வறட்டி மீதான வரி
4. இந்துக்களின் தீபாவளிப் பண்டிகையின் போதும் முஸ்லிம்களின் பண்டிகைகளின் போதும் ஏற்றப்பட்டு வந்த தீப அலங்காரங்களுக்கு விதிக்கப்பட்ட வரி
5. விழாக் காலங்களில் விற்பனை செய்யப் பட்ட பொருள்கள் மீது விதிக்கப்பட்டிருந்த துவான்னா என்ற வரி
6. இந்து விதவைகளை மணந்தவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த வரி
7. மீன்கள், காய்கனிகள், எரிபொருள்கள், பால், மண்பாண்டங்கள் மீது விதிக்கப் பட்டிருந்த வரி - இன்னும் சாலை வரி, அங்காடி வரி, வீடுகள் விற்பனை செய்யப்படும் போது விதிக்கப்பட்டிருந்த வரி ஆகியவற்றையும் நீக்கினார்.

இந்த வரிகளை நீக்கியதன் விளைவாக அரசுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் 30 இலட்சம் ரூபாய் வரை வருவாய் இழப்பு ஏற்பட்டது. இந்த இழப்பை ஈடு கட்டவே ஜகாத் வரியும் ஜிஸ்யா வரியும் விதிக்கப்பட்டன. எனவே அவர் இந்துக்களைத் துன்புறுத்த வேண்டுமென்பதற்காக ஜிஸ்யா வரியை விதிக்கவில்லை.

*2. கோயில்களை இடித்தாரா?*

இந்தக் குற்றச்சாட்டில் பெருமளவு உண்மை இல்லை. ஔரங்கஜேப் தனது இளமைக் காலத்தில் (ஷாஜகான் மன்னராக இருந்தபோது) இருபத்து ஐந்து ஆண்டுகள் தக்காணத்தின் நிர்வாகப் பொறுப்பில் இருந் தார். அப்போது அங்குள்ள கோயில்களை இடித்தார் என எந்த ஒரு செய்தியையும் எந்த ஒரு வரலாற்று ஆசிரியரும் பதிவு செய்ய வில்லை. அவர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னர் இரண்டு மூன்று கோயில்களை இடிக்க உத்தரவிட்டார் என சில வரலாற்று ஆசிரியர்கள் (குறிப்பாக ஜாதுநாத் சர்க்கார்) எழுதி வைத்துள்ளனர்.

நாடெங்கும் ஆயிரக்கணக்கான சிறிதும், பெரிதுமான கோயில்கள் இன்றைக்கும் இருக் கின்றன. பூரி, காசி, மதுரா, நாசிக், பண்டர்பூர், ஹரித்துவார், கல்கத்தா, திருப்பதி ஆகிய நகரி லிருந்த புராதனக் கோயில்களுக்கு ஔரங் கஜேப் ஆட்சிக் காலத்தில் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. அஜந்தா, எல்லோரா குகைக் கோயில்களுக்கும் புத்த கயாவிலுள்ள புத்தர் கோயில்களுக்கும் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை. இந்தக் கோயில்களையெல் லாம் இடிக்க உத்தரவிடாத ஔரங்கஜேப் வேறு சில கோயில்களை மட்டுமே இடித்ததற் குக் காரணம் இருக்குமல்லவா? அதனை சில வரலாற்றாசிரியர்கள் வசதியாக மறைத்து விட்டனர்.

தில்லிக்கு அருகிலுள்ள பத்ரா என்ற ஊரிலிருந்த பீர்சிங் தேவ் புத்தாலயத்து கோயிலை ஔரங்கஜேப் இடிக்க உத்தர விட்டார். இதற்குக் காரணம் அபுல் பாசலைக் கொன்று அவரிடமிருந்த பணத்தைக் கொள் ளையடித்து அந்தக் கோயில் கட்டப்பட்டதே யாகும். காசியிலிருந்த விசுவநாதர் ஆல யத்தை ஔரங்கஜேப் இடிக்க உத்தரவிட் டதற்குக் காரணம் அவருடன் வங்காளத் தில் பயணம் மேற்கொண்ட கட்ச் மன்னரின் மனைவி காசி கோயிலுக்குச் சென்ற போது கோயில் ஊழியரால் மானப்பங்கப்படுத் தப்பட்டதேயாகும். கோயில் தீட்டுப்பட்டு விட்டது என கோயில் நிர்வாகிகள் கூறியதன் அடிப்படையிலேயே ஔரங்கஜேப் அதனை இடிக்க உத்தரவிட்டார்.

**சில கோயில்கள் அவரது ஆட்சிக் காலத்தில் இடிக்கப்பட்டதற்கு மதவெறி காரணமல்ல. அது மட்டுமே காரணமாக இருந்திருந்தால் தனது ஆட்சிக்கு உட்பட்டிருந்த பகுதிகள் அனைத்திலுமிருந்த கோயில்களை இடிக்க உத்தரவிட்டிருப்பார். ஆனால் அப்படி எதுவுமில்லையே!**

இந்த உண்மையை முன்னணி வரலாற்று ஆசிரியர்களில் ஒருவரான சி.என். பாண்டே இஸ்லாமும் இந்தியக் கலாச்சாரமும் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். எனவே சில கோயில்கள் அவரது ஆட்சிக் காலத்தில் இடிக் கப்பட்டதற்கு மதவெறி காரணமல்ல. அது மட்டுமே காரணமாக இருந்திருந்தால், தனது ஆட்சிக்கு உட்பட்டிருந்த பகுதிகள் அனைத் திலுமிருந்த கோயில்களை இடிக்க உத்தர விட்டிருப்பார். ஆனால் அப்படி எதுவுமில் லையே!

எனினும் நாடெங்கிலும் 10 ஆண்டு களுக்குள் செங்கல்களைக் கொண்டோ, களி மண்ணைக் கொண்டோ கட்டப்பட்டிருந்த சிறு சிறு புதிய கோயில்களை இடிக்க அவர் உத்தர விட்டதைப் பல வரலாற்று ஆசிரியர்கள் பதிவு செய்துள்ளனர். புராதனக் கோயில்கள் எதனையும் சேதப்படுத்தக் கூடாது எனவும் அவர் உத்தரவிட்டிருந்தார். இந்த உத்தரவை எடுத்துக்காட்டியே ஔரங்கஜேப் கோயில் களை இடிக்க உத்தரவிட்டார் என கதை கட்டி விட்டனர்.

விடுதலை இந்தியாவில் இன்றைக்கும் கூட சாலை விரிவாக்கத்திற்காகவும் பிற மக்கள் நலத்திட்டங்களுக்காகவும் இந்து, முஸ்லிம், கிறித்தவ வழிபாட்டுத் தலங்கள் இடிக்கப்படுகின்றன. வடநாட்டின் பல நகரங் களில் இராமநவமியையொட்டி ஊர்வலம் நடத்துகின்ற இந்துத்துவ அமைப்பினர் வழி களிலுள்ள பள்ளிவாசல்களைச் சேதப் படுத்துகின்றனர். காவல்துறை கைகட்டி

வேடிக்கை பார்க்கிறது. படை நடத்திச் சென்று பல நாடுகளை வென்ற புகழ்பெற்ற பல மன்னர்கள் தாங்கள் வென்ற நாடுகளிலிருந்த பிற சமயத்தவரின் வழிபாட்டுத் தலங்களை இடித்ததாக வரலாற்றில் ஏராளமான சான்றுகள் இருக்கின்றன. ஆனால் மன்னர் ஔரங்கஜே பும் சரி அவருக்கு முன்னரும் பின்னரும் வந்த மொகலாயப் பேரரசர்களும் சரி, தாங்கள் வென்ற இந்தியாவில் எந்தவிதமான அழிப்பு வேலைகளிலும் ஈடுபடவில்லை. இந்த நாட் டையே தங்களது சொந்த நாடாக ஆக்கிக் கொண்டார்கள். அதுதான் உண்மை.

### 3. சகிப்புத் தன்மையற்றவரா? இந்துக்களை கொடுமைப்படுத்தினாரா?

இந்தக் குற்றச்சாட்டும் அடிப் படை ஆதாரமற்றது. பண்டைய இந்தியாவை ஆண்ட அரசரான அசோகரை விடவும் 13 ஆண்டுகள் அதிகம் ஆட்சிக் கட்டிலில் இருந்தவர் மன்னர் ஔரங்கஜேப். தனது நாட்டில் வாழ்ந்த மிகப் பெரும்பான்மையின ரான இந்து மக்களைப் பகைத்துக் கொண்டு இத்தனை ஆண்டுகள் ஆண்டிருக்க முடியுமா? தனது அரண்மனை தர்பாரில் நடைபெற்று வந்த ஆடல், பாடல் போன்ற கேளிக்கை நிகழ்ச்சிகளையும் தீபா வளிக் கொண்டாட்டங்களையும் ஔரங்கஜேப் நிறுத்தினார் என்பது உண்மையே!







தீபாவளிக் கொண்டாட்டங்களை நிறுத்தியதை வைத்துக் கொண்டும், ஜிஸ்யா வரி விதிக்கப்பட்டதைச் சுட்டிக் காட்டியும் ஔரங்கஜேப் இந்துக்களுக்கு எதிராக இருந்தார் எனப் பல இந்திய வரலாற் றாசிரியர்கள் எழுதியுள்ளனர். இந்துக்களை யும் முஸ்லிம்களையும் பிரித்து தனது ஆட்சியை நிலை நிறுத்திக் கொள்ள ஆங்கி லேயக் கிழக்கிந்தியக் கம்பெனியினர் சூழ்ச்சி செய்தனர். அதனைச் செயல்படுத்தும் வித மாக ஆங்கிலேய வரலாற்றாசிரியர்களையும் தூண்டி விட்டு இது போன்ற உண்மைக்குப் புறம்பான செய்திகளை வரலாற்றில் பதிவு செய்யச் செய்தனர் அவ்வளவே.

கோயில்களை இடித்தார் என்று குற்றம் சாட்டப்படும் மன்னர் ஔரங்கஜேப் பல கோயில்களுக்கு மானியங்கள் வழங்கியுள் ளார் எனப் பல வரலாற்று ஆசிரியர்கள் பதிவு செய்துள்ளனர். உஜ்ஜெயினிலுள்ள பாலாஜி ஆலயம், கௌகாத்தியிலுள்ள உமா னந்த் கோயில், சத்ருஞ்சயின் ஜைனர்கள் கோயில் ஆகியவற்றுக்கும் பல சீக்கியக் குருத் வாராக்களுக்கும் அவர் மானி யங்கள் வழங்கியுள்ளார். தமிழ் நாட்டைச் சார்ந்த சைவ மடாதி பதியின குமரகுருபரருக்குக் காசி யில் மடம் அமைக்க அனுமதி கொடுத்தார். இப்படி ஏராளமான தகவல்கள் வரலாற்றில் கொட்டிக் கிடக்கின்றன.

புராதனக் கோயில்களை இடிக் கக் கூடாது என்று ஆணையிட்ட ஔரங்கஜேப் தனது ஆணையினை உறுதிப்படுத்தும் விதமாகப் பின்னர் கீழ்வரும் ஆணையைப் பிறப்பித்தார்.

நமது பரிபாலனத்தின் கீழுள்ள இந்த நாளில் பனாரசிலும் அதன் சுற்றுப்புறங்களிலுமுள்ள இந்துக் குடிமக்கள் சிலரால் துன்புறுத் தப்படுவதாகவும், புராதனமாக இந்துக் கோயில்களின் பொறுப்பில் உள்ள பிராமணர்கள் அங்கிருந்து வெளியேறும்படி அச்சுறுத்தப்படு வதாகவும் அதனால் அந்த வகுப் பினர் மனவேதனைக்கு ஆளாகி யிருப்பதாகவும் நமது மேன்மைக் குரிய புனித அரசவைக்குத் தகவல் வந்துள்ளது. எனவே இந்த அரசாணை பிறப்பிக்கப்படுகிறது. பிராமணர்களையோ, பிற இந்துக்களையோ சட்ட விரோதமாகத் தலையிட்டு தொல்லை படுத்தக் கூடாது. அவர்கள் தங்களது தொழி லைத் தொடர்ந்து செய்து வரவும் இறைவன் அளித்த வரமான இந்த சாம்ராஜ்யம் நிலைக்கும் வகையில் அவர்கள் சமாதானம் நிறைந்த மனத்துடன் பிரார்த்தனைகள் நடத்தவும் முன் போலவே அனுமதிக்கப்பட வேண்டும்.

இப்படிப்பட்ட ஓர் உத்தரவைப் பிறப்பித்தவர்தான் மன்னர் ஔரங்கஜேப். இந்துக்களைக் கொடுமைப்படுத்த வேண்டுமென அவர் எண்ணியிருந்தால் இந்த உத்தரவினைப் பிறப்பித்திருப்பாரா?

மன்னரின் அரசவையில் ஏராளமான இந்து மன்ஸப்தார்கள் இருந்தார்கள். அவரது இராணுவத்தில் ஏராளமாக இந்துக்கள் தளபதிகளாகவும், படைவீரர்களாகவும் இருந்தனர். மேலும் இந்து சமய மக்களின் வழிபாட்டு உரிமைகளைத் தடுக்கின்ற எந்தவிதமான செயல்களிலும் அவர் ஈடுபட்டது இல்லை. அப்படிச் செய்தவர்களையும் அவர் தண்டிக்கத் தயங்கவில்லை.

ஔரங்கஜேப் ஒரு மன்னர். அந்தக் காலக்கட்டத்தில் பிற மன்னர்கள் எப்படி இருந்தார்களோ அதே குணாதிசயங்களுடன் அவரும் இருந்தார். அவர் இந்து சிற்றரசர்களுடன் மட்டும் போர் புரியவில்லை. தக்காணத்தில் தனது அரசுக்கு எதிராகச் செயல்பட்ட பாமினி சுல்தான்களிடமும் போர் புரிந்தார். தனது பேரரசின் எல்லைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும், அதனை விரிவுபடுத்தவும் யாருடனும் போர் புரிய அவர் எப்போதும் தயாராகவே இருந்தார். மன்னர்களுக்கேயுரிய ஓர் இயல்புதான் அது. அதனையே அவரும் கொண்டிருந்தார்.

மன்னர் ஔரங்கஜேப் வரலாற்றில் மிகவும் தவறாகச் சித்திரிக்கப்பட்ட ஒருவர். இத்தகைய வரலாற்றுப் புரட்டலை சில ஆங்கில, இந்திய வரலாற்று ஆசிரியர்கள் செய்து வந்துள்ளனர். இந்த திரிக்கப்பட்ட வரலாறே கடந்த பல ஆண்டுகளாக மாணவர்களுக்குப் பாடமாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது.

ஔரங்கஜேப் குறித்து வரலாற்றாசிரியர் செ.திவான் எழுதியுள்ள வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப் என்ற நூல் அவரின் உண்மையான வரலாற்றை எடுத்தியம்பியுள்ளது. அவர் மீது தொடுக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை ஆதாரப்பூர்வமாக மறுத்துள்ளது. இந்த நூலை IFTயும், விகடன் பிரசுரமும் வெளியிட்டுள்ளன.

(தொடரும்)

HIJAZ
LEATHERS PVT. LTD.,
Tanners & Exporters of
Finished Leathers & Fashion Gloves

HEAD OFFICE :
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

TANNERY :
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

GLOVE FACTORY :
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com

# சோம்பல் வேண்டாம் இயக்கம் வேண்டும்!

• அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது



‘(நபியே! இம்மக்களிடம்) கூறிவிடுவீராக: நீங்கள் செயல்பட்டுக்கொண்டிருங்கள்! அல்லாஹ்வும், அவனுடைய தூதரும், இறை நம்பிக்கையாளர்களும் உங்களுடைய நடத்தை எப்படியிருக்கிறது என்பதைப் பார்க்கத்தான் செய்வார்கள். பிறகு, மறைவான வெளிப்படையான அனைத்தையும் அறிந்தவனிடம் அதிவிரைவில் நீங்கள் திரும்பக் கொண்டு வரப்படுவீர்கள். அப்போது நீங்கள் செய்து கொண்டிருந்தவை குறித்து உங்களுக்கு அவன் அறிவித்து விடுவான்.’ (திருக்குர்ஆன் 9 : 105)

ஓர் இறை விசுவாசி (முஃமின்) சோம்பிக் கிடக்கக் கூடாது; எப்போதும் ஊக்கத்துடன் உற்சாகமாகவும் சுறுசுறுப்பாகவும் இயங்கிக் கொண்டிருக்க வேண்டும்; ஒரு செயல் வீரராக இருக்க வேண்டும் என்ற செய்தியையே மேற்கண்ட திருக்குர்ஆன் வசனம் நமக்குச் சொல்கிறது.

சோம்பேறித்தனம் வெற்றிக்கான பாதையில் ஒருவர் சந்திக்கின்ற ஒரு பெரும் தடை. அது உலக வாழ்வின் வெற்றிக்கு மட்டுமல்ல; மறுமை வாழ்வின் வெற்றிக்கும் ஒரு பெரிய தடைக்கல். சோம்பிக் கிடப்பதனால் நேரம் ஆயுள் என்ற அல்லாஹ் வழங்கிய ஓர் அரிய, பெரிய அருட்கொடை வீணாக்கப்படுகின்றது.

சோம்பிக் கிடப்பவர் செய்ய வேண்டிய காரியத்தை உரிய நேரத்தில் செய்ய

மாட்டார். மாறாக காரியங்களைத் தள்ளிப்போடுபவராக இருப்பார். இது ஒருவரின் வழக்கமாக மாறிவிடுகின்ற போது அது அவரது முன்னேற்றத்தையும் உயர்வையும் மெதுமெதுவாகக் கெடுத்து விடுகின்ற ஆபத்தான நோயாக மாறிவிடும்.

எந்தத் துறையிலும் முன்னேற்றம் பெற உழைப்பும் முயற்சியும் தான் திறவுகோல். சோம்பல் அந்தக் கதவையே மூடி விடுகிறது. சோம்பல் உலக வாழ்வுக்கு மட்டுமல்ல, ஒருவரின் ஆன்மிக வாழ்வுக்கும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடியதாகும் எனக் குறிப்பிட்டோம்.

சோம்பல் நற்கருமங்களை உரிய நேரத்தில் செய்யாமல் தள்ளிப் போடச் செய்கிறது. நற்செயல்களைச் செய்யவும், தீமைகளைத் தவிர்க்கவும் அது தடையாக அமைகிறது. இது ஒருவர் மறுமையில் தோல்வியடையக் காரணமாகிவிடும் அல்லவா? இதனால்தான் நபி முஹம்மத்(ஸல்) அவர்கள் சோம்பலை வெறுத்தார்கள். அவர்கள் அடிக்கடி அல்லாஹ்விடம் கேட்ட ஒரு துஆ பிரபலமானது:

‘யா அல்லாஹ்! கவலை, துயரத்திலிருந்தும், இயலாமை, சோம்பலிலிருந்தும், கோழைத்தனம், கஞ்சத்தனத்திலிருந்தும், கடன் சுமையாலும் மனிதர்களின் ஆதிக்கத்தாலும் ஏற்படும் துன்பத்திலிருந்தும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்’ (புகாரி, முஸ்லிம்)

எனவே சோம்பல் என்பது சாதாரண ஒரு குறை அல்ல; அது ஒரு ஆபத்தான ஆன்மிக நோயாகும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். நடைமுறையில் சோம்பலை வெல்ல பல வழிகள் உள்ளன.

முதலில் பணிகளை முன்கூட்டியே திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். தனது அன்றாட வாழ்க்கையை ஒரு நேர அட்டவணையின் படி அமைத்துக் கொள்ள வேண்டும். உடலையும் மனதையும் சுறுசுறுப்பாக வைத்துக்கொள்ள முறையான உடற் பயிற்சி உதவும்.

ஒவ்வொரு செயலும் இபாதத்(வணக்கம்) என்ற பார்வை உருவாகி விட்டால் நற்செயல்களில் ஆர்வம் அதிகரிக்கும்; ஊக்கமும் உற்சாகமும் பிறக்கும். இயங்காமல் சோம்பிக் கிடப்பவர்களுடனான சகவாசம் ஒருவரை சோம்பேறியாக்கும் என்பது யதார்த்தம். எனவே செயல்திறன் கொண்ட நட்பு வட்டாரத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். சோம்பலிலிருந்தும் இயலாமையிலிருந்தும் எப்போதும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேட வேண்டும்.

ஈருலக வாழ்வின் வெற்றிக்கு வெறும் ஆசைகளும் கனவுகளும் மட்டும் போதுமானவை அல்ல; ஈடுபாட்டுடன் கூடிய உழைப்பும் முயற்சியும் செயற்பாடும் அவசியம் என்பதை மனதில் கொண்டு சோம்பலைக் களைந்து சுறுசுறுப்பாக இயங்க திட உறுதி பூண வேண்டும்.

ஒவ்வொரு செயலும் இபாதத்(வணக்கம்) என்ற பார்வை உருவாகி விட்டால் நற்செயல்களில் ஆர்வம் அதிகரிக்கும்; ஊக்கமும் உற்சாகமும் பிறக்கும். இயங்காமல் சோம்பிக் கிடப்பவர்களுடனான சகவாசம் ஒருவரை சோம்பேறியாக்கும் என்பது யதார்த்தம். எனவே செயல்திறன் கொண்ட நட்பு வட்டாரத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். சோம்பலிலிருந்தும் இயலாமையிலிருந்தும் எப்போதும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேட வேண்டும்.

# RSSஇன் சித்தாந்தத்தைப் புரிந்துகொள்ளாமல் அதனை எதிர்கொள்ள இயலாது!

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்தியத் தலைவர்
**சையத் சஆதத்துல்லாஹ் ஹுஸைனியை**
RSS நூற்றாண்டையொட்டி தஅவத் இதழுக்காக
டாக்டர் ஃபஹீமுத்தீன் நிகழ்த்திய நேர்காணல்



**தமிழில் : Dr. கலீலுர் ரஹ்மான் MBBS., MS.,**

RSS தொடங்கி நூறாண்டு கழிந்து விட்டது. அந்த அமைப்பின் நீண்ட சர்ச்சைக்குரிய பயணம் பரவலாக ஊடகங்களிலும் பொது வெளியிலும் பேசப்பட்டது. இச்சூழலில் RSSஇன் சித்தாந்த அடிப்படைகள், குறிக்கோள், இலட்சியம், அது பின்பற்றும் இந்துத்துவா போன்றவற்றைப் புரிந்துகொள்வது முக்கியத் துவம் பெறுகிறது.

● **1925 முதல் RSSஇன் நூற்றாண்டு பயணத்தில் அதன் சித்தாந்தத்தை, அரசியலை, அமைப்பின் அபிவிருத்தியை நகர்த்துகிற அடிப்படைக் காரணிகள் என்ன?**

மூன்று பெரிய காரணிகள் உள்ளன. முதலாவது அதன் உள்ளீடாக அமைந்துள்ள பண்புகள். வலிமையான கட்ட மைப்பும் விரிவான நீண்ட காலத் திட்டமிடலும் கட்டுப்பாடு மிக்க பயிற்சி பெற்ற செயல்வீரர்களும் அதன் நேர்மறையான அம்சங்கள். இந்துச் சமூகத்தின் பல்வேறு பிரிவுகளைச் சென் றடையும் திறனும் கருத்து முரண் கொண்டவர்களையும் தன்னுள் கிரகித்துக் கொள்கிற கலையும் அவர்களிடத்தில் உண்டு. எந்தக் கடுமையான சூழலாக இருந்தாலும் குறிக் கோள் நோக்கிய விடாமுயற்சி, பொறுமையுடன் கூடிய நிலைகுலையாமை, பற்றுறுதியாய் நிற்றல் போன்ற பண்பு களும் அவர்களிடத்தில் உண்டு. வஞ்சகமான தந்திரம், சூழ்ச்சி செய்தல், ஏமாற்றுதல், அதிகார துஷ்பிரயோகம் போன்றவையும் அவர்களுக்கு உலகாதய சாதகங்களைத் தருகிறது.

இரண்டாவதாக தற்செயலாக நடந்த வரலாற்றுச் சம்பவங்களைத் தங்களுடைய உபாயங்களாலும் தந்திரங்களாலும் வியூகங்களாலும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண் டார்கள். குறிப்பாக ஆங்கிலேயர் ஆட்சியும் அவர்கள் ஏற்படுத்திய தடைகளும். அவர்கள் உருவாக்கிய இந்து முஸ்லிம் பதற்றங்கள், தேசப் பிரிவினை, இந்தியா பாகிஸ்தான் போர்கள், எமெர்ஜென்சி காலம், ஜனதா கட்சி ஆட்சி, மண்டல் கமிஷன் அறிக்கை, பொரு ளாதார தாராளமயமாக்கல், மதம் மார்கெட் கூட்டணி, உலகமயமாக்கலால் அவர்களுக்கு ஏற்பட்ட சில வாய்ப்புகள்.

மூன்றாவதாக மிக முக்கியமாக அவர்களது எதிராளிகளின் பல தவறுகள், தவறான மனப்பாங்கு, குறைபாடுகள் போன்றவை அவர்களுக்குச் சாதகமான வாய்ப்பாக அமைந் தது. காங்கிரசிடமும் பிற மதசார்பற்ற கட்சிகளிடமும் மலிந்திருந்த சந்தர்ப்பவாதமும்

அவர்கள் முன்னேற வழிவகுத்தது. சோசலிச, கம்யூனிச, தலித்திய இயக்கங்கள் தங்கள் சித்தாந்த வீரியத்தில் சற்று தயங்கி பின் வாங்கியதும் மனந்தளர்ந்ததும் ஒற்றுமை குலைந்ததும் அவர்கள் வளர்வதற்கு வழி வகுத்தது. முஸ்லிம்களின் தற்காப்பு அரசியலும் முஸ்லிம்கள் உணர்ச்சிவசப்பட்டு நிகழ்த்தும் எதிர்வினையும் அமைப்புசார் பலவீனங்களும் RSS மேலே செல்ல உதவியது.

- **இந்துத்துவாவின் சித்தாந்த அடிப்படைகள் என்ன? அது வெறுமனே ஒரு மத தேசியவாதமா அல்லது விரிவான கலாச்சார அரசியல் நாகரிகக் கோட்பாடா? முஸ்லிம்களுக்கு அவர்களிடத்தில் என்ன இடம் இருக்கிறது ? முஸ்லிம்கள் குறித்து என்ன கருத்து கொண்டிருக்கிறார்கள்?**

ஒரு சிலர் அவர்களை சமய தனிக் குழுவினர் என்றும் வேறு சிலர் அமெரிக்காவிலும் தென்னாப்பிரிக்கவிலும் இருந்த இனவாதத்தின் இந்தியப் பதிப்பு என்றும் மற்ற சிலர் பிராமணிய மேலாதிக்கத்தின் வரலாற்று ரீதியான தொடர்ச்சி எனவும் நினைக்கிறார்கள். இந்தக் கூறுகளெல்லாம் அதில் உள்ளன. ஆனால் அதன் அடிப்படைகளை இவை நிர்ணயிக்கவில்லை. அடிப்படையில் அது சித்தாந்த நாகரிக இயக்கம். அவர்களது முக்கியக் குறிக்கோள் இந்தியாவின் அடையாளத்தை ஒரே மாதிரியான இந்துத்துவ சுயநிலையாக வடிவமைப்பது. அனைவரது அபிலாஷைகளையும் தார்மிக நெறிமுறை பற்றிய கருத்துகளையும் பொதுப் புத்தியையும் கூட்டான நினைவுகளையும் வரலாறையும் ஒரே வார்ப்பில் கொண்டு வருவது.

இந்த இயக்கத்தின் முதன்மையான உளவியல் என்னவெனில் என் கருத்துப்படி அது ஒருவிதமான கூட்டுதிரள் பொறாமை என்பேன். ஆப்ரஹாமிய மதங்கள் குறிப்பாக இஸ்லாம் போல இந்து மரபுகளுக்குக் கட்டமைக்கப்பட்ட கொள்கைகளும் சட்ட சிந்தனை முறைகளும் இருப்பதாக நம்புவது. விரிவான நாகரிகமும் உலக சமூகமும் இருப்பதாகக் கருதுவது. இந்த ஏக்கங்களின் விளைவே RSS இயக்கம். சில அறிஞர்களின் கூற்றுப்படி மிகச் சரியாகச் சொல்வதானால் இந்து மதத்தை செமித்தியமயமாக்குதல் ஆகும்.

RSSஇன் முழுத் திட்டத்திலும் முஸ்லிம்களைப் பற்றி இனரீதியாகவோ அவர்களது இருப்பினாலோ பிரச்னை இல்லை. இஸ்லாத்தின் உலகம் தழுவிய பார்வையும் சித்தாந்தமும் நாகரிகமும்தான் அவர்களுக்குப் போட்டி என நினைக்கிறார்கள். அவர்கள் சண்டையிடுவது முஸ்லிம் உடலை நோக்கி அல்ல. ஆனால் பெரும்பான்மை கலாச்சார ஓட்டத்தில் கலந்து கரைந்துவிட மறுக்கும் சிந்தனையை நோக்கி. (கலவரங்கள், கும்பல் படுகொலைகள், வன்முறைகள் எல்லாம் கலாச்சார ரீதியாக அடிமைபடுத்தத்தான்).

அவர்களது இறுதியான இலக்கு என்னவென்றால் அவர்கள் நினைக்கும் படியான சமூகமாக முஸ்லிம்கள் அமைய வேண்டும் என்பதே. அந்த முஸ்லிம் சமூகம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என நினைக்கிறார்கள் என்றால் கூட்டாக ஒரு மறதியை சுவீகரித்துக் கொள்ள வேண்டும். தங்களது நாகரிக பாரம்பரியத்தையும் சிறப்புக் கூறான விழுமியங்களையும் மறந்துவிட வேண்டும். தங்களது கலாச்சாரத்தில் இருந்து முற்றிலும் விலகி தங்களது அறிவுத்திறன் சார்ந்த தன்னம்பிக்கையையும் இழந்து விட வேண்டும். முஸ்லிம்களின் எண்ணங்களும் சொல்லும் கனவுகளும் இந்துத்துவ வர்ணத்தின் எல்லைக்குள் மட்டுமே அமைய வேண்டும்.

- **இந்திய விடுதலைக்கு முன் RSSஇன் வேலைகள் எதைச் சுற்றி அமைந்திருந்தன? சில வரலாற்றாளர்கள் குறிப்பிடுவது போல பிரித்தானிய ஆட்சி பற்றிய அவர்கள் நிலைப்பாடு இரட்டை முகம் கொண்டதாகவும் சந்தர்ப்பவாதமாகவும் இருந்ததா?**

RSS விடுதலைப் போரில் எந்தப் பங்கும் வகிக்கவில்லை என்பதில் எந்த ஐயமும் இல்லை. இன்னும் அவர்கள் பிரிட்டாஷாரோடு கைகோர்த்துக் கொண்டார்கள் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. அவர்கள் பார்வையில் இந்து ராஷ்டிரத்தை உருவாக்குவதே

முதன்மை முன்னுரிமை ஆகும். அவர்களது குறுங் குழுவாத உலகநோக்கு முஸ் லிம்களின் நிலையான சித் தாந்த நாகரிக அஸ்திவாரங் களை ஒரு பிரச்னையாகப் பார்க்கச் செய்தது. அந்தக் கட்டத்தில் இந்துக்களுக்கான நிலையான அடிப்படைகளைக் கட்டமைப்பதையே தங்களது தலையாயப் பணியாகக் கரு தினர். எல்லா காலனிய சக்தி யும் காலப்போக்கில் வீழ்ச்சி அடையும் என்பதை அவர்கள் புரிந்து வைத்திருந்தார்கள்.

**சூழலுக்கு ஏற்றார் போல் மாறுபட்ட வேடமும் முகமூடியும் தரித்துக் கொண்டார்கள் ஏமாற்றுவது தகிடுதத்த தந்திரோபாயங்கள் செய்வதெல்லாம் இலக்கை அடைவதற்காகச் செய்யும் சரியான வழிமுறைகள்தான் என ஆக்கினார்கள். இது தான் அவர்களது செயல் முறையின் சுருக்கம்.**

அவ்வாறு காலனிய ஆட்சி வீழ்ச்சி அடை கிறபோது எந்தச் சமூகம் நன்றாக தன்னை தகவமைத்துக் கொண்டு நீடித்த நாகரிக வலி மையுடையதாக இருக்கிறதோ அவர்கள் அதி காரத்தைச் சுவீகரித்துக் கொள்வர் என்பது அவர்களின் நிலைப்பாடு. அவர்களின் குறுகிய குழுவாத, பிரிவினைவாதக் கண்ணோட்டம் பிரிட்டிஷார் இந்தியாவை விட்டுச் செல்கின்ற போது அனைத்துத் தரப்பினரையும் உள்ள டக்கிய சமூகம் அதிகாரத்திற்கு வருவதை அவர்கள் விரும்பவில்லை. மாறாக இந்து சமூகம் மட்டுமே ஆட்சிக்கும் அதிகாரத்திற் கும் வாரிசாக வேண்டும் என விரும்பியது. RSSக்கு ஆங்கிலேயர் ஆட்சி என்பது வரலாறு ஏற்படுத்திக் கொடுத்த மிகப் பெரிய வாய்ப்பு.

அந்தக் காலகட்டத்தைத் தக்கவைத்து இந் துத்துவ அடையாளத்தையும் அதன் உள்கட்ட மைப்பையும் வலுப்படுத்தி பூர்த்தி செய்யப் பயன்படுத்திக் கொண்டார்கள். ஆங்கிலேய ஆட்சியுடன் அவர்கள் கொண்டிருந்த உறவு அவர்களது உலகநோக்கின் மீது ஒளி பாய்ச்சு கிறது. கடந்த காலத்திலும் சரி நிகழ்காலத் திலும் சரி அவர்களது குறுகிய தேசியவாதம் என்பது வெளிசக்திகளைக் குறிவைத்து அல்ல மாறாக உள்நாட்டின் ஒரு பிரிவினரைக் குறி வைத்தே வந்துள்ளது; இனியும் இருக்கும்.

- **விடுதலைக்குப் பிறகு இந்திய ஜன நாயகத்திற்குள்ளும் மதசார்பற்ற அரசமைப்புக்குள்ளும் அவர்களது இடத்தை எவ்வாறு செதுக்கிக் கொண்டார்கள்? பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்ட 1992 முதல் இன்று வரை உள்ள காலகட்டத்தை எப்ப டிப் பார்க்கிறீர்கள்?**

விடுதலைக்குப் பிறகு RSS சித்தாந்த அநாதையாக இந்திய அரசியலில் நுழைந்தது. ஒரு மதசார்பற்ற குடியரசில் அதற்கு இடமில்லை என்பது வெள்ளிடைமலை. ஆனால் சிறிது சிறிதாக அது தனக்கான இடத்தை உருவாக்க ஆரம் பித்தது. எமெர்ஜென்சிவரை உள்ள காலகட் டத்தில் அவர்கள் பச்சோந்தி போல தங்கள் சுய ரூபத்தை மறைத்துக் கொண்டிருந் தார்கள். RSS வேடம் கட்டும் கலையை நன் றாகக் கற்றிருந்தார்கள்.

சில சேவைகள் மூலம் சமூகத்தில் தங் களுக்கான இடத்தை ஏற்படுத்திக் கொண் டார்கள். இடைவிடாத பரப்புரையின் மூலம் மக்களின் மனங்களை ஆக்கிரமித்தார்கள். போலியான வேடமிட்ட தங்கள் மாற்றாள்கள் மூலம் அதிகார மையங்களில் ஊடுருவி னார்கள். அவசர நிலை பிரகடனம் வரை உள்ள காலகட்டத்தில் அவர்களது சூழ்ச்சி உபாயங்கள் இந்த மூன்றாக இருந்தன. அதனை வெகு திறமையாகச் செயல்படுத்தி னார்கள். காங்கிரசின் மீது பொதுவாக அதிருப்தி நிலவியது. மக்கள் ஒரு மாற்றை தேடிக் கொண்டிருந்தார்கள். RSSக்கு ஜனதா கட்சி ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. அதிலே நுழைந்து கொண்டார்கள். அதன்பின் அரசியல் மாற்றாக தங்களை முன்னிறுத்திக் கொண்டார்கள்.

1992இல் இராம ஜென்மபூமி ரத யாத் திரை மூலம் பக்குவமில்லாத புரிதல் இல் லாத மக்களை உசுப்பேற்றி வெறியேற்றி அணிதிரட்டும் பரிசோதனையைச் செய் தார்கள். பின் அந்த உத்தியை பெருமளவில் மக்களைத் திரட்ட பயன்படுத்திக் கொண்

டார்கள். அதே காலகட்டத்தில் பல்வேறு பட்ட வழிகளில் பலதரப்பட்ட உத்திகளைக் கையாண்டு இந்தியாவின் சிக்கலான பல பிரிவிலான சமூக அமைப்புக்குள் அவர்கள் ஊடுருவினார்கள். 2014க்குப் பிறகு அவர்கள் ஊடுருவியுள்ள சமூகத்தையும் அரசையும் ஒழுங்கமைக்க குறிக்கோள் கொண்டார்கள். அரசையும் கட்சியையும் அதிகாரிகளையும் தொழில்வணிகத்துறையையும் ஊடகங் களையும் தங்களுக்கு இணக்கமாக நேர்படுத் திக் கொண்டார்கள். அவர்களுடைய முறைமை ஒவ்வொரு படிநிலையிலும் அந்த அந்தக் காலகட்டத்தின் தேவைகளை நன்றாக புரிந்து கொண்டிருந்தது.

கட்டுப்பாட்டோடு அந்தத் தேவைகளை தங்களுக்குச் சாதகமாக நிறைவு செய் தார்கள். அடுத்த நிலைக்கு பொறுமையாக காத்திருந்தார்கள். ஏதும் சொல்லாமல் இருக்க வேண்டிய நேரத்தில் மௌனமாக இருந்தார்கள். பின்வாங்க வேண்டியதிருந்தால் பின் வாங்கினார்கள். லாவகமாக வேலை செய்தார்கள். சன்னம் சன்னமாக எதிரிகளைச் செய லிழக்கச் செய்தார்கள். சூழ லுக்கு ஏற்றார்போல் மாறுபட்ட வேடமும் முகமூடியும் தரித்துக் கொண்டார்கள். ஏமாற்றுவது தகிடு தத்த தந்திரோபாயங்கள் செய்வதெல்லாம் இலக்கை அடைவதற்காகச் செய்யும் சரி யான வழிமுறைகள்தான் என ஆக்கினார்கள். இதுதான் அவர் களது செயல்முறையின் சுருக்கம்.

> **அவர்கள் சண்டையிடுவது முஸ்லிம் உடலை நோக்கி அல்ல. ஆனால் பெரும்பான்மை கலாச்சார ஓட்டத்தில் கலந்து கரைந்துவிட மறுக்கும் சிந்தனையை நோக்கி.**

- **தற்போது RSSம் அவர்களுடைய கருத்தியல் கிளை அமைப்புகளும் கூட்ட மைப்புகளும் முழு பலத்தோடு அதிகா ரத்தில் அமர்ந்துவிட்டார்கள். முஸ்லிம் களுக்கு எதிரான தங்களது பணிநிரலைத் தெளிவாக முன்நகர்த்திச் செல்கிறார்கள். இந்தச் சூழலில் இந்திய முஸ்லிம்கள் எதிர்நோக்கியிருக்கும் மிகப் பெரிய சவால்கள் யாவை ?**

மிகப்பெரிய சவால் என்பது முஸ்லிம்கள் இந்தச் சவாலின் உண்மையான இயல்பைப் புரிந்துகொள்வதுதான். இந்திய முஸ்லிம்களின் நிலைமை அமெரிக்காவில் ஆப்பிரிக்க அமெரிக்கர்கள் எதிர்நோக்கிய சவால்கள் போன்றதோ அல்லது ஃபாசிஸ ஜெர்மனியில் யூதர்கள் எதிர்நோக்கிய சவால்கள் போன் றதோ அல்ல. ஏன் இந்தியாவின் தலித் வர லாற்றிலிருந்தும் முன் மாதிரியைப் பெற முடியாது. அது மட்டுமல்ல இந்திய விடு தலைக்குப் பிறகு இந்தியாவில் முஸ்லிம்கள் அனுபவித்த பாதிப்புகளிலிருந்தும் பாடம் பெற முடியாது. இது முற்றிலும் தன்நிகரற்ற சவால். அதற்கு தன்னிகரற்ற தனிச்சிறப்பான பதிலடி வேண்டும். RSSஇன் இயங்காற்றலை ஆழமாகப் புரிந்து கொள்ளாமல் அதனை எதிர்கொள்வது இயலாத காரியம்.

இந்தச் சவாலின் முக்கிய பரிணாமம் எதுவென்றால் அது சித்தாந்தம் சார்ந்ததும் நாகரிகம் சார்ந்ததும் ஆகும். வாய்ப்புக் கேடாக இந்தப் பரிணாமம் பற்றிய விழிப்பு உணர்வு மிகப் பலவீனமாக உள்ளது. நான் முன்பே சொன்னது போல சித்தாந்த அடையாளத்தையும் தன்னம்பிக்கையையும் இழக் கச் செய்வதே அவர்களது முக்கிய குறிக்கோள். இந்தக் குறிக்கோளை அடைவதற்கு அவர்கள் கடைப்பிடிக்கும் திறம் வாய்ந்த வழிமுறை என்னவென்றால் முஸ்லிம்களை அச்சம் கொள்ள வேண்டிய அரக்கத்தனம் கொண்டவர்களாக சித்திரிக்கும் கதையாடல்களைச் செய்தல். அரசியலிலும் பொருளாதாரத்திலும் நாகரிகத்திலும் மனரீதி யாகவும் கதையாடல் போரைத் தொடுத்து முஸ்லிம்களைத் தனிமைப்படுத்துவது. அதன் மூலம் முஸ்லிம் நாகரிகத்தை முழுமையாக வீழ்த்துவது. இனி அரசியலில் பிரதிநிதித் துவம் இல்லை என்பது மட்டுமல்ல பிரச்னை.

மையப் பிரச்னை என்னவென்றால் அரசியலில் முஸ்லிம்களின் இருப்பை சட்டப் பூர்வமற்றதாக ஆக்கிவிடுவதுதான். முஸ்லிம்களின் பங்கெடுப்பை வகுப்புவாதமாகவும் திருப்திபடுத்துதலாகவும் மிக அதிகமாகச் சித்தரிக்கிறார்கள். (IAS ஜிஹாத் என்று சொல்வது போல்). முஸ்லிம்கள் அரசியல் அரங்கில் இல்லாதிருத்தல் என்பது விருப்பத்திற்குரிய விழுமமாக ஆக்கிவிட்டார்கள். (ஆதலால் வேட்பாளர் பட்டியலிலும் அமைச்சரவையிலும் இருப்பதில்லை). முஸ்லிம்களுக்கு இருக்கும் ஒரே வழி நீதியையும் பாரபட்சமின்மையையும் நேர்மையையும் தெளிவான நிரலாகக் கொண்ட எல்லா தரப்பு மக்களுக்குமான அரசியல் சக்தியாக தங்களை முன்நிறுத்துதல்தான்.

பொருளாதாரத்தில் முஸ்லிம்களைப் பலவீனமடையச் செய்யும் முயற்சிகளும் எத்தனங்களும் நிறுவனமயமாக்கப்பட்டுவிட்டன. (பசுக் குண்டர்கள் மூலமாகவும் முஸ்லிம்கள் கடையில் பொருள்களை வாங்கக் கூடாது என்றும் புல்டோசர் பயங்கரவாதத்தின் மூலமும்). முஸ்லிம்களைத் தனிமைப்படுத்துதல் என்பது தற்காலிகமான சில கலவரங்கள் கும்பல் படுகொலைகள் என்பதோடு மட்டும் நில்லாமல் பாலிசி மாற்றங்கள் மூலமாக நிரந்தரப்படுத்தப்படுகிறது. இந்த நாட்டின் நாகரிக பரிணாமத்தில் நாட்டுரிமைக்கான இலக்கணம் மறுவரையறை செய்யப்படுகிறது. வரலாற்றில் முஸ்லிம்களை அரக்கத்தனமான வில்லன்களாக மாற்றிக் காட்டப்படுகிறார்கள். இந்திய ஜனநாயகத்திற்குப் பாரம் என்றும் எப்போதும் ஐயத்திற்கு உரியவர்கள் என்ற சிந்தனையும் சாதாரணமாக ஆக்கப்பட்டுவிட்டது. இவை எல்லாம் சரி காணப்பட்டு வழமையாக்கப்பட்டுவிட்டது.

RSSஇன் குறிக்கோளில் ஒன்று முழு சமூகத்தையும் அச்சமும் திகிலும் நிறைந்த மனநிலையில் வைத்து செயல் இழக்கச் செய்வது ஆகும்.

தற்காப்பு மனநிலை மிகத் தீவிரமான பலிகடா மனப்பான்மை எதிர்வினை மனவியல் தன்னிலிருந்தும் வரலாற்றிலிருந்தும் தன் பண்பாட்டு நாகரிகத்திலிருந்தும் எல்லா நிறுவனங்களிலிருந்தும் தலைமை பீடங்களிலிருந்து அந்நியமாகுதல் என்கிற இந்த நிலை பரவுமானால் முஸ்லிம்களை பண்பாட்டு ரீதியாக வீழ்த்துதல் எளிது. தற்போது RSS முழு முனைப்போடு இந்த மனவியல் வியூகத்தில் தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அது தான் மிகப் பெரிய சவால்.

*(தொடரும்)*

## சமரசம் இதழுக்குப் படைப்புகள் அனுப்புவோர் கவனத்திற்கு..!

★ சமரசம் இதழுக்கு வாசகர் கடிதம், கவிதை, சிறுகதை, கட்டுரை அனுப்புவோர் samarasam.article@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ, சமரசம் அலுவலக முகவரிக்கோ அனுப்ப வேண்டும். www.samarasam.net இணையதளத்தின் வாயிலாகவும் படைப்புகளை அனுப்பலாம்.

★ உங்கள் முழு முகவரி, அலைப்பேசி எண்ணை அவசியம் குறிப்பிட வேண்டும்.

★ உங்கள் படைப்புகளை எங்களுக்கு அனுப்பிய மூன்று மாதத்திற்குள் சமரசத்தில் பிரசுரமாகவில்லையெனில் அந்தப் படைப்பை வேறு தளங்களில் நீங்கள் பயன் படுத்திக் கொள்ளலாம்.

**- பொறுப்பாசிரியர்**



# கொல்லும் நஞ்சு தீண்ட அஞ்சு

• ஓசூர் மணிமேகலை

மதுவென்ற அரக்கன் கேட்டில்
மனிதனவன் கெட்டான் நாட்டில்
மெதுவாகக் கொல்லும் நஞ்சு
மேதினியில் தீண்ட அஞ்சு

எதுவெல்லாம் நன்மை என்றே
எண்ணித்தான் செயலை ஆற்று
புதுமைகளை மகிழ்ந்தே ஏற்றுப்
புத்துணர்வாய்த் திறனை நாட்டு

குடியென்றால் குடும்பம் பாழாம்
குற்றமென்றே உணர்ந்து மாறு
படித்தவரும் மதியால் கெட்டார்
படிக்காதார் தெருவில் வீழ்ந்தார்

அடிபட்டும் திருந்தா மாந்தர்
அழிவைத்தான் தேடிச் சென்றார்
வடிகாலாய் எண்ண வேண்டாம்!
வாழ்க்கையிலே வென்றே காட்டு

அறிவினைநீ இழப்பாய் இன்றே
அழித்திடுமே உன்னைக் கொன்றே
உறவுகளும் மதிக்க மாட்டார்
ஒதுக்கிடுவர் கேலி பேசி

குறைகளையே களைந்து நீயும்
குடிமறந்து மனிதன் ஆவாய்
விரைவினிலே குடியை விட்டு
வெற்றிகாணும் வழியைத் தேடு

• **K. ஜலாலுத்தீன்**




**நூல்:** சமூக நீதி: இஸ்லாமியப் பார்வை

**ஆசிரியர்:** டாக்டர் **K.V.S.** ஹபீப் முஹம்மத்

**வெளியீடு:** இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட், 138, IFT லேன், பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 600012
அலைப்பேசி: 8668057596

**பக்கங்கள்:** 112 **விலை:** ரூ. 120/-

மனித சமூகம் படைக்கப்பட்ட காலந்தொட்டு அனைவருக்கும் சம உரிமை உண்டா?, வலியவன் எளியவன் என்ற வேறுபாடு ஏன்?, செல்வம் சிலரிடமே குவிந்து கிடக்கவேண்டுமா? என்பன போன்ற வினாக்கள் மனித மனத்தின் வாசலில் தொடர்ந்து தட்டிக்கொண்டே இருக்கின்றன. இவ்வினாக்களுக்குப் பொருளாதாரம், அரசியல், சட்டம் எனப் பல துறைகள் பல்வேறு விடைகளை முன்வைத்துள்ளன. ஆனால் மனிதனை வெறும் பொருளாதார அலகாகவோ, அரசியல் வாக்காகவோ கருதாமல் அவனை இறைவனின் படைப்பாகவும் அறநெறிப் பொறுப்புடைய உயிராகவும் நோக்கும் இஸ்லாம் சமூக நீதியை ஓர் உயர்ந்த வாழ்வியல் கொள்கையாக முன்வைக்கிறது.

இஸ்லாமியப் பார்வையில் நீதி என்பது நீதிமன்றத்தின் நாற்காலியில் மட்டும் அமர்ந்திருக்கும் கருத்தல்ல; அது மனிதனின் உள்ளத்திலிருந்து பிறந்து, குடும்பத்தில் மலர்ந்து, சமூகத்தில் மணம் பரப்பி, ஆட்சியில் நிலை பெற வேண்டிய அறமாகும். ‘நிச்சயமாக அல்லாஹ் நீதியையும் நன்மையையும் கட்டளையிடுகிறான்’ என்ற குர்ஆனியப் போதனை, இஸ்லாமிய சமூக நீதியின் அடித்தளமாக விளங்குகிறது. நீதி என்பது ஒருவருக்கு வழங்கப்படும் சலுகை அல்ல; ஒவ்வொரு மனிதனுக்கும் உரிய அடிப்படை உரிமை.

இஸ்லாம் மனிதர்களை பிறப்பாலும் இனத்தாலும் நிறத்தாலும் மொழியாலும் செல்வத்தாலும் உயர்வு தாழ்வு படுத்துவதில்லை. மனிதகுலம் ஒரே மூலத்திலிருந்து படைக்கப்பட்டது என்பதை வலியுறுத்தும் இஸ்லாம், மனிதர்களுக்கிடையிலான உண்மையான மேன்மை இறையச்சத்திலும் நன்னடத்தையிலும் இருப்பதாகக் கூறுகிறது. இதனால் ஒரு மனிதனின் பிறப்பு அவனது மதிப்பை நிர்ணயிப்பதில்லை; அவனது பண்பும் பொறுப்பு உணர்வுமே அவனை உயர்த்துகின்றன.

முஹம்மது நபி(ஸல்) அவர்களின் வாழ்விலும் இக்கொள்கை நடைமுறை வடிவம் பெற்றது. அரபுச் சமூகத்தில் நிலவிய குலப் பெருமை, இன வேறுபாடு, அடிமைத்தனம், பெண்களின் உரிமை மறுப்பு போன்ற பல சமூகத் தீமைகளுக்கு எதிராக நபிகளார் குரல் எழுப்பினார்கள். பிலால்(ரலி) போன்ற கறுப்பினத்தைச் சேர்ந்த அடிமையும், சல்மான் அல் ஃபார்ஸி(ரலி) போன்ற அரபு அல்லாதவர்களும், செல்வச் செழிப்புடையவர்களும், ஏழைகளும் ஒரே சமுதாயத்தின் அங்கங்களாக மதிக்கப்பட்டனர். பள்ளிவாசலில் ஒரே வரிசையில் தோள் தொட்டுத் தொழுத அந்தக் காட்சி சமூக சமத்துவத்தின் உயிருள்ள ஓவியமாக அமைந்தது.

இஸ்லாமிய சமூக நீதியின் மற்றொரு முக்கியத் தூண் பொருளாதார நீதி ஆகும். செல்வம் சிலரின் கைகளில் மட்டுமே தேங்கி நிற்காமல் சமூகத்தின் பல்வேறு தரப்பின ரிடமும் சுழல வேண்டும் என்பதே இஸ்லா மியப் பொருளாதார நெறியின் நோக்கம். இதற்காக ஜகாத் என்னும் கட்டாயத் தர்மத்தை இஸ்லாம் நிறுவியது.

அதேபோல் ஸதகா எனப்படும் தன்னார் வத் தர்மம், தானம், விருந்தோம்பல், அண்டை அயலாரின் நலன் பேணுதல் ஆகிய வற்றையும் இஸ்லாம் ஊக்குவிக்கிறது.

அநீதிக்கு எதிரான நிலைப்பாடும் இஸ் லாமிய சமூக நீதியின் இதயமாகும். ஒருவர் மீது கொண்ட பகை, அவனுக்குரிய நீதியை மறுக்கக் காரணமாக இருக்கக்கூடாது என்று குர்ஆன் அறிவுறுத்துகிறது. நீதியின் தராசு உற வினருக்காக ஒரு பக்கமும், அந்நியருக்காக மற்றொரு பக்கமும் சாயக்கூடாது. நண்பனாக இருந்தாலும், எதிரியாக இருந்தாலும் நீதி நிலைநாட்டப்படவேண்டும். இதுவே இஸ்லா மிய நீதியின் உயர்ந்த தன்மை.

இன்றைய உலகில் சமூக நீதி குறித்து பேசும் போது வறுமை, வேலை வாய்ப்பின்மை, கல்வி வாய்ப்பில் சமமின்மை, பாலினவேறு பாடு, இன மொழி அடிப்படையிலான பாகு பாடு, பொருளாதாரச் சுரண்டல் போன்ற பல்வேறு பிரச்னைகள் நம் கண்முன்னே நிற்கின்றன. இவற்றை எதிர்கொள்ள இஸ் லாமியக் கொள்கைகள் வழங்கும் பாடம் தெளிவானது: மனிதனை மதித்தல், உரி மையைப் பாதுகாத்தல், செல்வத்தைப் பகிர் தல், பலவீனரைத் தாங்குதல், அநீதிக்கு எதிராகக் குரல் கொடுத்தல், அதிகாரத்தைப் பொறுப்புடன் பயன்படுத்துதல்.

இஸ்லாமியப் பார்வையில் சமூக நீதி என்பது வெறும் சட்டச் சொல் அல்ல; அது மனித நேயத்தின் ஆன்மா. நீதியற்ற சமூகம் வெளிப் புறத்தில் எவ்வளவு செழிப்பாகத் தோன்றினா லும் அதன் உள்ளம் வறண்ட பாலைவனமே.

சமூக நீதி என்பது பிறருக்காக நாம் செய்யும் ஓர் உதவி அல்ல; அது ஒவ்வொரு மனிதனுக்கும் நாம் செலுத்த வேண்டிய ஓர் அறக் கடன். நீதி நிலைபெறும் இடத்தில் மனிதநேயம் மலர்கிறது; மனிதநேயம் மலரும் இடத்தில் சமூகம் உயர்கிறது.

இத்தகைய அரிய கருத்துகளை ஒருங் கிணைத்து, அவற்றிலிருந்து மானுடம் பெற வேண்டிய வாழ்வியல் படிப்பினைகளைத் தெளிவாகவும் எளிமையாகவும், ஆழ்ந்த சிந்தனையுடனும் தொகுத்து, ‘சமூக நீதி: இஸ் லாமியப் பார்வை’ எனும் இந்நூலை அழகு தமிழில், இனிய நடையில் வழங்கியுள்ளார் பன்னூலாசிரியர் டாக்டர் K.V.S. ஹபீப் முஹம் மத் அவர்கள். IFT மிகச் சிறப்பான முறையில் இதனை வெளியிட்டுள்ளது.

சமூக நீதிக்காகக் குரல் கொடுப்போர் மட்டுமல்லாது, அனைவரும் இந்நன்னூலை ஆழ்ந்து கற்று, இதன் உயரிய கருத்துகளைத் தம் வாழ்விலும் சமூகத்திலும் நடைமுறைப் படுத்தி, இம்மண்ணில் சமூகநீதி மலரத் துணைநிற்க வேண்டும்.


ஒரு
வாட்ஸ்அப்
மெஸேஜ் போதும்!

- இலவசமாய் இஸ்லாமிய நூல்களைத் தொடர்ந்து வாசிக்கலாம்.
- இதர மத அன்பர்களின் இஸ்லாம் குறித்த தேடலுக்கான தளம்
- இது ஓர் அஞ்சல் வழி நூலகம்

உங்களின் முழு முகவரியையும், விருப்பத்தையும் 89252 16126 என்ற எண்ணிற்கு வாட்ஸ் அப் மெஸேஜ் அனுப்புங்கள். நூல்கள் வீடு தேடி வரும்.

இஸ்லாமிக் அகாடமி
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 12.
மின்னஞ்சல் : postallibrary@gmail.com

# அக்கரைப் பச்சை

## 46

• ஜரினா ஜமால்

சாலிஹா அடுத்த கவரைப் பிரித்தாள். சென்னை செல்ல டிக்கெட். A-1. முதல் வகுப்பு ஏசி. வெல்கம் டு சென்னை என்ற எழுத்துகள் ஒரு பேப்பரில். முன்னுக்குப் பின் முரணாக உணர்ந்தாள். மொட்டைக் கடிதம் வரவேண்டாம் என்றது. இங்கு மேடம் நல்வரவு என்று போட்டிருக்கிறாள். மேடத்திற்கு உன்னைப் பிடிக்கவில்லை என்றது கடிதம். அதே மேடம் பீவி அம்மாவிடம் போன் செய்து சாலிஹாவைப் பற்றிப் புகழ்ந்து பேசி உள்ளார்.

நான் வெளிச்சம் இல்லத்திற்குப் போவதில் யாருக்கு நஷ்டம்?, ஒருவேளை பிரியா மேடம் எழுதி இருப்பாளோ? நினைவிற்கு வந்தது, 'பிரியா மேடத்தை வேலையை விட்டு நீக்கி விட்டார்கள் ஆண்ட்டி!'

நான் அங்கு செல்வதால் பிரியாவிற்கு என்ன இழப்பு? அவள் அதிகம் படித்தவள். எங்கு சென்றாலும் வேலை கிடைக்கும். இது ஒரு வித பொறாமை. தனக்கு அவள் செய்த இடைஞ்சல்கள், அவமானப்படுத்தியது, மட்டம் தட்டிப் பேசியது ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்தது. தனக்கு ஒரு கண் போனாலும் தனக்குப் பிடிக்காதவருக்கு இரண்டு கண்கள் போக வேண்டும் என்று நினைப்பது போல் அல்லவா உள்ளது?

பிவீ அம்மா சாலிஹாவை அழைத்தாள். 'கடிதச் செய்தி என்னம்மா? ஏதோ யோசனையாக இருக்கிறாயே?'

அமைதியாக அம்மாவின் பக்கத்தில் கட்டிலில் வந்து அமர்ந்தாள். கடிதத்தைத் தாயாரின் கையில் கொடுத்தாள். கடிதத்தை வாசித்த பிவி அம்மா, 'நான் சொன்னது போல் தான் இருக்கு. நீ ஹோமுக்குப் போவது எதிரிக்குப் பிடிக்கவில்லை. பாடம் மட்டும் சொல்லிக் கொடுத்தால் பேசாமல் இருப்பாரோ என்னவோ! நீ பிள்ளைகளுக்கு ஈமானையும் ஒழுக்கத்தையும் கற்றுக் கொடுக்கிறாயே அது அந்த பிரியா டீச்சருக்குப் பிடிக்கவில்லை'

'பிரியா டீச்சர் தான் எழுதினாள் என்று எப்படி அம்மா தெரியும்?'

'அவளைத் தவிர அங்கு உனக்கு இடைஞ்சல் கொடுப்பதற்கு யார் இருக்கிறார்கள்? உள்ளங்கைப் புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா?. உன் மதிப்பு நிர்வாகத்திற்கு தெரிந்திருக்கு. அதைப் பயன்படுத்திக்கோ. உன்னை அனுப்ப எனக்கு மனமில்லை. இங்கேயே வேறு வீடு பிடித்து உனக்குத் துணையாக நான் இருந்து கொள்வேன். வீட்டிலேயே 10 பிள்ளைகளுக்கு ஓதச் சொல்லிக் கொடுத்து போகப் போக பெருக்கிக் கொள்ளலாம் என்று தான் உன் அக்கா மகன்களிடம் சொல்லி இருந்தேன். ஆனால் உன் மேடம் என்னிடம் பேசிய பிறகுதான் உன்னை அனுப்ப முடிவெடுத்தேன்.

நாம் விரும்பிப் போவதை விட நம்மை விரும்புகிறவர்களிடம் போய் இருப்பது நமக்குச் சிறப்பு. பிள்ளைகளோடு இருக்கும் போது உன் மனமும் அமைதிப்படும். இன்னும் பத்து நாள்கள் இருக்கு. யாரிடமும் ஒன்றும்

சொல்ல வேண்டாம். பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய். போகும் போது போன் போட்டு எல்லாரிடமும் சொல்லிக் கொள்ளலாம்'

சாலிஹாவின் பிடிவாதம் மெல்ல மெல்ல அசைந்தது. இரவு தம்பி பிள்ளை களிடம் கதை சொல்லும் போது, 'மாமி ஊருக்குப் போறேன். இப்போ மாதிரியே தொழணும், ஓதணும், சண்டை பிடிக்காமல் பள்ளிக்கூடம் போகணும், அம்மா சொல் கேட்டு நடக்கணும்' என்றாள்.

'இப்பதானே மாமி ஊருக்குப் போனீங்க?'

'சென்னைக்குப் போகிறேன்'

'உங்களுக்கு என்ன மாமி நிறைய பிள்ளைங்க இருக்காங்க. எங்களுக்குத் தான் மாமி இல்லை'

'ஏன் ஆமினா மாமி இருக்காங்க, சம்ஸ் மாமி இருக்காங்க'

'ஆமினா மாமி வந்துட்டு உடனே போயிடுவாங்க. எங்களோடு தூங்கி கதை சொல்ல மாட்டாங்க. சம்சு மாமி வரவே மாட்டாங்க. வந்தாலும் சண்டை போட்டுத் தான் போவாங்க.'

'நீ வாப்பூமாவுடன் தூங்கு. வாப்மா நிறைய கதை சொல்லுவாங்க'

'மாமி, வாப்மா நிறைய ஓல்ட் ஸ்டோரி தான் சொல்றாங்க'

'அப்படியெல்லாம் சொல்லக்கூடாது செல்லங்களா! ஓல்ட் ஸ்டோரி எல்லாம் கோல்ட் ஸ்டோரிங்க. இப்ப அப்படிப்பட்ட கதைகள் எல்லாம் பாடப் புத்தகத்தில் வருவதில்லை'

ரஷிதா சாலிஹாவின் பக்கத்தில் வந்து படுத்தாள். 'மச்சி! அசையாத மலை மாதிரி நின்னீங்களே! நானும் ரஹ்மானியா மதரஸாவுக்குப் போய்ட்டுத் தானே வாரேன். படிச்சு முடிச்சு உங்களோடு ஜாயின் பண்ணிக்கலாம்னு நினைச்சேன். இப்படிச் செஞ்சிட்டீங்களே!'

அசைய வைத்த கடித வரிகளைக் கூறினாள். 'நீ படித்து முடி'

'என்னை மறைமுகமாக மிரட்டி வரவிடாமல் செய்வது யார் என்று தெரிய வேண்டும். மேலும் அசையாமல் தான் இருந்தேன். மேடத்தின் டிக்கெட்டும் அம்மா விடம் பேசியதும் மனதைப் புரட்டி விட்டது'



'ரோசப்பட வேண்டியது தான். ஆனால் என் ரோஷத்தால் பலருக்கும் பாதிப்பு என்று நினைக்கும் போது என் ரோசத்தை மூட்டை கட்டி வைத்து விட்டேன். நீ என்னோடு ஜாயின் பண்ணுவதாகச் சொல்லும்போதே ஓர் அதிகாரம் கிடைத்தது போல் ஒரு யானை பலம் வந்து விட்டது. உன் பிள்ளைகளும்

சில ஆண்டுகளில் வளர்ந்து விடுவார்கள். சாஜிதா அப்பா வீட்டிற்கு நான் பயான் பண்ணப் போனதால்தான் இந்த ரோஷினி (வெளிச்சம்) விடுதிக்கு அழைத்து வந் தார்கள். இது போல் ஒரு நல்ல ஆள் கிடைத்துவிட்டால் பொறுப்பை ஒப்ப டைத்து வந்துவிடுவேன்'

'இரண்டு நாளைக்கு டவுன்ஹால் ரோடு புது மண்டபம் வருகிறாயா?'

'அங்க என்ன மச்சி வேலை?'

'நான் வரும்போது டிரஸ்ட்டில் உள்ள மேடங்கள் எல்லாம் ஏதேதோ வாங்கிக் கொடுத்தார்கள். அவர்கள் எல்லோருக்கும் ஏதாவது வாங்கிக் கொண்டு போக வேண் டும். குறிப்பாக முபீனுக்கு டிரஸ் எடுக்க வேண்டும். சரோஜா அம்மா வாட்ச்மேன் அங்கிள் எல்லாருக்கும் ஏதாவது கொண்டு போக வேண்டும்'

'போகலாம் தூங்குங்க..! நீங்க போய் விட்டால் நான் தான் லோன்லியா ஃபீல் பண்ணுவேன்'

கழியும் நாள்களில் சாலிஹா பிஸி ஆகி விட்டாள். கடைகளுக்குப் போக அந்த குஜராத் பிள்ளைகளுக்குப் பிடித்த மாதிரி வளையல் கிளிப்புகள், பேண்டுகள் எல் லாம் வாங்கினாள். மேடங்கள் அனை வருக்கும் ஹாஜி மூசா ஜவுளிக் கடையில் விலை உயர்ந்த சல்வார் செட்டுகள் வாங்கி பெட்டிகளை நிறைத்தாள். முபீனுக் கென்று தனியாக நிறைய துணிமணிகள் வாங்கினாள். அவள் தனக்காகச் செய்த ஒவ்வொன்றும் மறக்க முடியாத நினைவுகள் அல்லவா?

ஊருக்குப் போகும் ஒரு நாளைக்கு முன் பீவியம்மா சொல்லித்தந்த படி சித்திமா, பெரியக்கா, அண்ணன், தங்கை அனைவருக்கும் பயணம் சொன்னாள். வரும் போது தனியாக இறங்கி வீடு வந் தாள். போகும்போது குடும்பமே திரண்டு வழியனுப்பி வைத்தது ஹஜ்ஜுக்குப் போவது போல் இருந்தது.

**'என்னை மறைமுகமாக மிரட்டி வரவிடாமல் செய்வது யார் என்று தெரிய வேண்டும். மேலும் அசையாமல் தான் இருந்தேன். மேடத்தின் டிக்கெட்டும் அம்மாவிடம் பேசியதும் மனதைப் புரட்டி விட்டது'**

கன்னியாகுமரி ரயில் வந்து நின்றது. Ac கூபேயில் அவளை அமர வைத்து பொருட்களை ஒழுங்குபடுத்திய அக்கா மக்கள் ஆதரவாகப் பேசினார்கள்.

'சாச்சி! சந்தோசமாகப் போய் வாங்க! உங்கள் கனவு எதிர்காலத்தில் நனவாகும். நாங்கள் தூண்களாக உங்களோடு நிற் போம்'

கூட்டத்தில் அனைவரையும் திரும்பத் திரும்பப் பார்த்தாள்.

'எல்லோரும் இங்குதானே இருக்கி றோம். யாரை அப்படித் திருப்பிப் திருப் பித் தேடுகிறாய்? பரக்கப் பரக்கப் பார்க் கிறாயே?' ஆமினா அக்கா கேட்டாள்.

'நான்... நான்.. ஒரு முகத்தைத் தேடி னேன்'

'அது யாரம்மா எங்களுக்குத் தெரி யாமல்?'

'நான் சல்மானைத் தேடினேன்'

இதுவரை சல்மானின் பெயரை சாலிஹா உச்சரித்ததை ஆமினா அக்காவோ சாலிஹாவின் குடும்பத்தினரோ கேட்டதே இல்லை.

'எங்கம்மா ராஜாத்தி' என்று அவளைச் சேர்த்தணைத்து அழுதாள் ஆமினாக்கா.

என்னவென்று புரியாமல் அனைவரும் அழுதார்கள்.

(தொடரும்.. )

# சமரசம் புதிர் போட்டி 20

- இந்தப் பகுதியில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடையை 2026 அக்டோபர் 31 ஆம் தேதிக்குள் கடிதம் மூலமோ, 73050 40386 என்ற வாட்ஸ் அப் எண்ணிலோ, samarasam.article @gmail.com என்ற மின்னஞ்சல் மூலமோ அனுப்பலாம்.
- சரியான விடையை எழுதுபவர்களுக்கு ரூபாய் 200 பரிசுத் தொகையாக வழங்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் தேர்ந் தெடுக்கப்பட்டு பரிசுத் தொகை வழங்கப்படும்.
- இப்பகுதியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகள் குர்ஆன், ஹதீஸ், கடந்த சமரசம் இதழ்கள் ஆகிய வற்றிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.
- போட்டியில் கலந்து கொள்பவர் தங்களின் பெயர், முகவரி, அலைப்பேசி, G Pay எண் ஆகிய வற்றை அவசியம் குறிப்பிட வேண்டும்.

1. அல்லாஹ் கூறுகின்றான்: ‘நான் இணை வைப்பிலிருந்தும், ஒட்டுமொத்த இணைவைப் பாளார்களிலிருந்தும் தேவையற்றவனாக இருக்கின்றேன். என்னுடன் வேறு ஒருவரை இணையாக்குகின்ற வகையில் ஒருவர் எந்த வேலையைச் செய்தாலும் நான் அவனையும் அவன் செய்த இணைவைப்பையும் விட்டு விடுகிறேன்’ இந்த நபிமொழியை அறிவித்தவர்

   அ) இப்னு மஸ்ஊத்(ரலி)
   ஆ) அபூஹுரைரா(ரலி)

2. ஜிப்ரீல்(அலை) அவர்களை எத்தனை இறக் கைகளுடன் நபி(ஸல்) அவர்கள் பார்த் தார்கள்?

   அ) அறுநூறு இறக்கைகள்
   ஆ) நான்கு இறக்கைகள்

3. பிரவுன்ஃபீல்ட் இன்வெஸ்ட்மெண்ட் என்பது..

   அ) புதிதாக நிறுவனம் தொடங்கப்படுவது
   ஆ) ஏற்கனவே இயங்கும் நிறுவனத்தை விரிவு செய்வது

4. இஸ்லாத்தைத் தழுவிய நெதர்லாந்து நாட்டின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்

   அ) பால் டென்னட்
   ஆ) யோரான் வான் கிளாவரென்

5. காலை உணவுத் திட்டத்தை முதன் முதலில் தொடங்கியவர்

   அ) பி.தியாகராயர் செட்டியார் ஆ) காமராஜர்

6. செங்கடலையும், ஏடன் வளைகுடாவையும் இணைக்கும் நீரிணை

   அ) ஹொர்மூஸ் ஆ) பாப் அல் மந்தப்

7. உலக சிரிப்பு தினம்

   அ) அக்டோபர் முதல் வெள்ளிக்கிழமை
   ஆ) அக்டோபர் இறுதி வெள்ளிக் கிழமை

8. இறுதியாக ஆட்சி செய்த முகலாய மன்னர்

   அ) ஔரங்கஜேப் ஆ) இரண்டாம் பகதூர் ஷா

9. ‘இந்த நிலத்தின் உரிமை ஃபலஸ்தீனர்களுக்கே உரியது’ என்று கூறிய யூத மத குரு

   அ) ரபி எல்ஹானான் பெக்
   ஆ) ரபி கல்மான் பெர்

10. மின் வாரியத்தின் கடன் சுமை

   அ) 2.47 இலட்சம் கோடி ஆ) 30,965 கோடி

## புதிர் போட்டி பதினெட்டிற்கான விடைகள்

1. அ)அல் அஃராஃப் 2. ஆ)அபூஹுரைரா(ரலி) 3. அ)அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப்(ரலி) 4. ஆ)பெற்றோர்கள் 5. அ)கரிகால்சோழன் 6. ஆ) 100 கோடி கன அடி 7. அ) 208 8. ஆ) தேசிய கௌரவ அவமதிப்பு தடுப்பு(திருத்த) மசோதா

### சரியான விடையை எழுதியவர்கள்:

1. S.A. அமீர் அலீ, கிள்ளை 2. கௌஸ் மீரான், திருநெல்வேலி 3. சையத் ஜுபைர், தர்மபுரி 4. ஸ்ரீமதி, மஞ்சக்குப்பம் 5. G.அன்பழகன், ஆற்காடு 6. V.S. சம்சுத்தீன் ஃபைஜி, கடைய நல்லூர் 7. பரீதா சேகு முஹையதீன், சென்னை 8. முஹம்மத் உவைஸ், ஏர்வாடி 9. ஷிஃபா, ஏரல் 10. T.A. அயானா, கடையநல்லூர் 11. நூர்ஜஹான், ஏர்வாடி 12. பிர்தௌஸ், திருநெல்வேலி 13. பர்சானா பர்வீன், ஆழ்வார்திருநகரி 14. பாலா ஆமீனத், சிக்கல் 15. H. ஹாஜா முஹையதீன், குன்னூர் 16. H.S. அமீது, கொரக்கவாடி 17. H. நபீசா, சென்னை 18. H. அசீம், காரைக்கால் 19. அஹமத் சாஹித், சென்னை 20. ந. அனிபா, நாமக்கல் 21. ஜா, ஜுனைதா பேகம், பரங்கிப்பேட்டை 22. ப.சையத் அஹமத், துளசேந்திரபுரம் 23. சோழா புகழேந்தி, கரியமாணிக்கம் 24.முஹம்மது சலீம், புதுச்சேரி 25. G. கிருஷ்ணன், ஆற்காடு 26. R. பாலசுப்ரமணி, ஆக்கூர்

### பரிசுக்குரியவராகக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்:

**பிர்தௌஸ், திருநெல்வேலி**



# விண்ணை நோக்கி..!

– ஹபிபா. ய
மூன்றாம் ஆண்டு மாணவி,
தய்யிபா மகளிர் இஸ்லாமிய கல்லூரி,
திருச்சி

வானம் என் எல்லை அல்ல
என் வெற்றியின்
முதல் பக்கம்

ஒரு விமானத்தைப் போல
என் கனவுகளுக்கும்
இறக்கைகள் தேவை

மேகங்களைத் தாண்டி
தடைகளைத் தாண்டி
உயர வேண்டும்,
அந்த விமானத்தைப் போல

மேகங்களுக்கு மேலே
என் பாதை
உயரங்களுக்கு அப்பால்
என் இலக்கு

மேகங்கள் கடந்து செல்லும்
ஒவ்வொரு நொடியும்
என் கனவு
அருகில் வரும்
ஓர் அடியாகும்

தரையில் தொடங்கிய
என் பயணம்
ஒருநாள் வானத்தில்
பெயர் சொல்லும்

ஒவ்வொரு முயற்சியிலும்
ஒரு புதிய அத்தியாயம்

ஒவ்வொரு வெற்றியிலும்
என் கனவின்
கையொப்பம்

# வழிகண்டுபிடியுங்களேன்..!




## சித்திரம் பேசுது..!



த.தவுசியா பாத்திமா, 8ஆம் வகுப்பு,
கிங்ஸ்டன் மெட்ரிக் பள்ளி,
வந்தவாசி



Y. மாஹிரா, Grade 4,
Shanthinikethan
Indian School, Doha, Qatar

கடந்த இதழுக்கான வார்த்தை
விளையாட்டு விடை : மைசூர்

**அன்புச் செல்லங்களே..!** இது உங்கள் பக்கம். சிறுகதை, கவிதை, துணுக்கு, விடுகதை என நீங்கள் எதுவும் எழுதலாம்! இங்கு இடம்பெற்றுள்ள அழகிய வண்ண ஓவியங்களைப் போல நீங்களும் ஓவியங்கள் வரைந்து அனுப்பலாம். வாட்ஸ்அப்பில் அனுப்ப: **7305040386**

அனுப்ப வேண்டிய முகவரி : *சிறார் உலகம், சமரசம் மாதமிருமுறை இதழ்*
IFT *லேன், 138 பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 600012*

# இந்துக் குழந்தையின் உயிர்காக்க உதவிய ஜும்ஆ பள்ளிவாசல்



ஓர் ஏழை இந்துச் சகோதரியின் 2 வயது பெண் குழந்தையின் உயிர்காக்கும் மருத்துவச் சிகிச்சை செலவினங்களுக்காக புதுதில்லி ஜும்ஆ பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்கு வந்த முஸ்லிம்கள் வாரி வழங்கிய தொகை 6.33 கோடி ரூபாய்.

டெல்லியைச் சேர்ந்த இந்துச் சகோதரியின் 2 வயது பெண் குழந்தை அபூர்வமான Spinal Muscular Atrophy SMA Type 1 நோய் பாதித்து உயிருக்கு ஆபத்தான நிலையில் தில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தது. இந்தக் குழந்தைக்கு உயர் சிகிச்சை வழங்கி உயிரைக் காப்பாற்று வதற்கு வெளிநாட்டில் இருந்து ஊசி மருந்து இறக்குமதி செய்வதற்கு 9.70 கோடி ரூபாய் தேவைப்பட்டது.

மகளின் உயிர் காக்க பல்வேறு இடங்களிலும் உதவி தேடி அலைந்த தாய்க்கு உதவ யாரும் முன்வரவில்லை. எய்ம்ஸ் மருத்துவமனை நோயாளிகளுக்கு உதவும் வகையில் Fund Raise நடத்தும் சோசியல் மீடியா இன்ஃப்ளூயன்சர் சன்னி மஹோர் வீடியோக்கள் மூலம் உதவி வேண்டி பதிவு செய்தும் எடுபடவில்லை.

இந்த நிலையில் அந்தக் குழந்தையின் மருத்துவ உதவி குறித்த தகவல் தில்லியைச் சேர்ந்த முஹம்மது கலீஃபாவுக்குத் தெரியவர தில்லி ஜும்ஆ பள்ளி நிர்வாகத்தின் உதவி யோடு வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்கு வந்த முஸ்லிம்களிடம் தெரிவிக்கப்பட்டது. குழந்தையின் சிகிச்சை விபரங்கள் அடங்கிய T ஷர்ட் அணிந்த தன்னார்வலர்கள் கையில் கிடைத்த அட்டைப் பெட்டிகளையும், QR CODE தாங்கிய பதாகைகளையும் ஏந்தி பள்ளி வளாகம் முழுவதும் நிதி சேகரித்தனர்.

ஏழை இந்துக் குழந்தையின் மருத்துவச் சிகிச்சைக்கு உதவும் வகையில் தொழுகைக்கு வந்த முஸ்லிம்கள் வாரி வழங்கிய தொகை ஆறு கோடி 33 லட்சம் ரூபாய் எனும் இமாலய உதவி. வடமாநிலங்களில் பள்ளிவாசல்களை இடித்துத் தரைமட்டமாக்கும் முயற்சியில் பாஜக அரசு ஈடுபட்டுவரும் வேளையில் பள்ளிவாசலிலிருந்து ஓர் இந்துக் குழந்தையின் உயிருக்கு உதவ முன்வந்த செய்தி மிக முக்கியத்துவம் பெறுகிறது.

**– குளச்சல் அசீம்**

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed by : S. Rajan at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.

ST COURIER®
The People's Choice

YOUR E-COMMERCE, OUR EXPERTISE

# WE NOW ACCEPT TO PAY & COD BOOKINGS

"A NEW GATEWAY FOR YOUR BUSINESS"




SAFE & SECURE DELIVERY

FAST & RELIABLE

NATIONWIDE NETWORK

TRUSTED BY BUSINESSES

Priority

Follow Us On :

Posted at Egmore RMS - Patrika Channel
SAMARASAM Tamil Fortnightly 16 - 31 OCTOBER 2026 Registered With the RNI No : 33723/81
Postal Regn. No. TN/CCN/428/2024-2026 WPP No : TN/PMG(CCR)/WPP 450/2024-2026
(Publication Date 1st & 16th of Every Month) Posted on 1-3 & 16-18 of Every Month.

TRADITIONAL TRUST SINCE 1925
LKS
100 YEARS

- எவர்கள் நம்பிக்கை கொண்ட ஆண்களையும் பெண்களையும் அவர்கள் செய்யாத குற்றத்தை(ச் செய்ததாக)க் கூறி துன்புறுத்துகிறார்களோ அவர்கள், நிச்சயமாக (பெரும்) அவதூற்றையும் பகிரங்கமான பாவத்தையுமே சுமந்து கொள்கின்றனர்.

– திருக்குர்ஆன் 33:58

கதீட்ரல் ரோடு
L.K.S.
கோல்டு பேரடைஸ்
35. கதீட்ரல் ரோடு, சென்னை - 600 086.
போன் : (044) 2811 3611


If undelivered, please return to : **Samarasam, 138, Perambur High Road, Chennai - 600 012.**